உ

குருபாதம்


# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 19] விகாரி ஆண்டு மாசித்திங்கள் 10—3—60 [இதழ் 4




உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

ஆசிரியர் :- **வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**

துணை ஆசிரியர் :- **வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசகர்**

## உட்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிவ ஞான போதம் | ... 187 |
| 2. | வரவேற்பிதழ்கள் | ... 190 |
| 3. | தருமையாதீன வெளியீடுகள் | ... 200 |
| 4. | இராமேசுவர யாத்திரை | ... 204 |
| 5. | கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும் | ... 210 |
| 6. | பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள் | ... 212 |
| 7. | சிவாகமம் | ... 214 |
| 8. | வாழும் வழி | ... 218 |
| 9. | திரு. G. வரதராஜப்பிள்ளை அவர்களுக்கு பாராட்டுரை | 220 |
| 10. | திருவள்ளுவரும் சித்தாந்தமும் | ... 222 |
| 11. | கடிதம் | ... 226 |
| 12. | முன்னியது முடிக்கும் முருகன் | ... 230 |
| 13. | ஜ்யோதிர்லிங்கம் | ... 235 |
| 14. | திருக்கோளிலியில் நெல் மகோற்சவம் | ... 238 |
| 15. | செய்திகள் | ... 240 |
| 16. | எதிர்காலம் | ... 248 |


### அட்டைப்பட விளக்கம்

திருவிராமேச்சுரத் தல யாத்திரையின் போது, தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருப்பாற் றுறை ஆலயத்தில் வழிபாடு முடித்துத் திரும்ப எழுந்தருளல்.

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்

# ஞானசம்பந்தம்

[ தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு ]

மலர் 19 | விகாரி - மாசி 10—3—60 | இதழ் 4

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

# சிவ ஞான போதம்

( மலர் 19, இதழ் 3, பக்கம் 133 இன் தொடர்பு )

"அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே உலகாம் தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று."

இத் திருவெண்பா, 1. அவையே ஆதல் 2. தானே ஆதல் 3. அவையே தானே ஆதல் என்னும் மூன்றனையும் ஒருங்கே வலியுறுத்துவது.

தடை :- அம் மூன்றற்கும் முன் (தனித்தனி வெண்பாவில்) வெவ்வேறு உவமை எடுத்துக் காட்டினீர். அவற்றால்

உம் மதம் 'அநேகாந்தவாதம்' ஆம் என்பது பொருந்தும் அன்றோ ? (ஏகம் - ஒன்று. அநேகம் - பல. அந்தம் - முடிபு. வாதம் - பேச்சு).

விடை :- அரக்கை உருக்கி அதனோடு கற்பொடியைச் சேர்த்து அணைப்பர். அணைத்த பொடியும் உருக்கிய அரக்கும் ஒன்றுசேர்ந்து பிரிவின்றிநிற்கும். அவ்வாறே முதல்வன் உயிர்களின் ஒன்றுகூடி நின்று பிரிவின்றி நின்றுடனாகலால், தானேயாம்; உலகேயாம்; தானே உலகேயாம். ஆதலின், அநேகாந்தவாதம் ஆகாது. ( உவமம் சாணைக்கல் ).

தடை :- (1) வாமதேவ முனிவன் முதலியவர் 'யானே உலகெல்லாம் ஆயினேன்' எனக் கூறுதலாலும்

(2) சர்வஞ்ஞானோத்தரத்தில் யானே எல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன் என்று உயிர்கள்மேல் வைத்தோதுதலானும்.

உயிர்களும் இந்த இலக்கணங்களை உடையன ஆகும் அன்றோ ?

[ குறிப்பு :- தூத்துக்குடி, பொ. முத்தைய பிள்ளை அவர்கள் எழுதிய சிற்றுரை விளக்கத்திலும் ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் பதிப்பிலும் எண். 1. இல் உள்ளதே 2. இலும் உளது. பின்னதற்கு முன்னது உதவியாக இருந்த காரணமோ மற்று யாதோ தெரியவில்லை. ]

விடை :- பாசக் கூட்டத்தின் நீங்கித் தனியாய் நின்ற என்னுள் அம் முதல்வன் சோகம்பாவனையால் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றுவான். அத் தோற்றத்தால், இம் முத்திகாலத்தில் 'யானே உலகெல்லாம்' என்பேன் ஆயினேன். அதுபற்றி உயிர்களும் அவ்வாறு ஆவான் செல்லல்

இல்லை. [பேத்தகாலம் முத்திகாலம் என்னும் இரண்டனுள் இது முத்திகாலத்து வாக்கியம்.]

சோகம் ( - ச : + அஹம் ) அதுநான், தத்துவமசி முதலிய நால்வேறு வாக்கியங்களுள் ஒன்றன் பொருளை யுடைய தமிழ் வாக்கியம் இது. இதுவே தலையான ஒற்றுமை. கண்ணன் அருச்சுனனுக்குக் கீதை நூல் செவியறிவுறுத் தினன். அதில், இவ்வொற்றுமைபற்றியே அந்நூலில், 'யானே உலகெல்லாம் ஆயினேன்' என்று கண்ணன் கூற்றுக உண்டு. அதனோடு அமையாமல், முதல்வனது விசுவருபத் தைத் தான் காட்டினான்; 'ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக' என்றான். அதனை உறுதியாகக் கொண் டான் அருச்சுனன். அக் கண்ணன் கூறிய கருத்தை நோக்கினான். சாகுமளவும் சிவபூஜை செய்துவந்தான். கண்ணன்மேல் இட்ட மலர்களை முதல்வன் திருமுடிமேற் கண்டான்.

கண்ணன் உபமன்னிய முனிவரிடத்தில் சிவதீக்கை உற்றுத் தன்னையும் தலைவனையும் உணர்ந்தவன்: அதனால், சிவோகம்பாவனையைத் தலைப்பட்டான். அப் பேரருளே கண்ணனது பெருமைக்குக் காரணம்.

1. கலப்பாய் நிற்றலைக் குறித்து 'உடங்கியைந்து' என்றும்.

2. பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயா தலைக் குறித்து 'நின்று' என்றும்.

3. உயிர்க்குயிராய் நிற்றலால் தானே உலகாதலைக் குறித்துப் 'பிரிப்பின்றி' என்றும் கூறப்பட்ட சொற்றொடர் இவ் வெண்பாவில் உள்ளன.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்கு வரவேற்பு

# வரவேற்பிதழ்கள்

### திருநள்ளாறு ஸ்தானிக பெருமக்கள்

**தருமைத் தவமணியே! வருக!**

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க தங்கள் ஆதீனம் ஆற்றி வருகின்ற பணி கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். ஒல்லும் வகையால் எல்லாம் தாங்கள் அறம்பல புரிகின்றீர்கள். இதைக் கண்டு இதயம் பூரிப்படையாதார் யார்?

**தண்டமிழ் புரக்கும் வண்டமிழ்க் காவல!**

தாங்கள் வண்டமிழை வளர்க்க தமிழ்க் கல்லூரியும் மற்றும் பல கலா நிலையங்களையும் அமைத்து மாணவர்களின் மன இருளை அகற்றுவதில் தங்கள் ஆதீனம் தலைமையாய் உளது என்பதைக் கூறாமலிருக்க இயலாது.

**அரன் பணியைத் திறம்பட நடாத்தும் செம்மால்! வருக!**

தங்கள் ஆதீனத்தின் கீழ் உள்ள ஆலயங்கள் இருபத்தேழு. அவையாவும் செம்மையான முறையில் திறம்பட நடைபெறுவது அறிந்து போற்றுகின்றோம்.

**கண்ணுதல் வீற்றிருக்கும் கயிலையைக் கண்டோய்! வருக!**

கயிலை நாதனைத் தரிசித்து எங்களுக்கெல்லாம் அவன் பேரருளினை வழங்க இங்கு எழுந்தருளி இருப்பது குறித்து மகிழ்கின்றோம். தாங்கள் பல்லூழி காலம் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றோம். போற்றுகின்றோம்.

### திருநள்ளாறு இளைய காங்கிரஸ் கமிட்டியார்

சைவமணியே! தருமை பெற்ற தவமணியே! வருக! வருக!

சைவத்தையும் தமிழையும் கண்ணெனப்போற்றிப் போலியச் செய்தும் ஆலயந்தோறும் அருள் விளக்கேற்றியும் வருகின்ற

---

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியபோது 16—1—60 இல் வாசித்தளித்தவை.

அன்புசால் தருமை தந்த தவமணியே வருக! வருக; தருமபுரத்தீர் என்ற பெயருக்கேற்ப அறம்பல புரிந்து வருகின்றீர்கள். நாத்திகம் பேசி நாத்திகம் பெருகுகின்ற இந் நாளிலே நான்முகன் பெருமை கூறி நற்றொண்டு பல புரிந்து இறைவனின் பெருமைகளை இனிமையுடன் விளக்கி ஏற்றங் கண்டுவிட்டீர் இவ்வையத்தில்.

அரும்பணியாற்றும் ஆத்மீகப் பெரியீர்!

தீரமுடன் தாங்கள் மேற்கொண்ட திருக்கயிலாய யாத்திரை மக்களின் மனத்திலே பக்தியைச் சுரக்கச் செய்திருக்கிறது; தெய்வ நம்பிக்கையைத் தழைக்கச் செய்திருக்கிறது என்பதற்குத் தங்களுக்கு நாடெங்கும் கிடைத்துவரும் நல்வரவேற்பே ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பனிமழை கண்ட பைந்தமிழ்க் காவலரே!

மக்களின் கல்வி, ஆரோக்கிய அறிவு வளர்ச்சிக்கு மகத்தான பல திருப்பணிகள் தங்களால் தாராளமாக நிறை வேற்றப்பட்டு வருவது போற்றுதற்குரிய தொன்றாகும். பசிப்பிணிகளைப் போக்கிப் பைந்தமிழை இப்பாரெங்கும் பரப்பி பயிலச்செய்யும் அரும்பணியினை அறமெனக்கொண்டு அயராது உழைக்கும் அன்பின் உருவே! அருளின் ஊற்றே! பண்பின் பிறப்பே! தங்களையும் தங்களின் அரும் பெரும் பணிகளையும் வரவேற்கின்றோம்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி"

காரை சைவசித்தாந்த வித்தியாச்சிரமத்தார்

தருமையாதீனம் திருக்கயிலாய பரம்பரை என்பதைத்
தெள்ளென விளங்கச் செய்த தோன்றலே வருக!

ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர் திருக்கயிலையை ஞானக்கண்ணால் கண்டு பதிகம் பாடினார். நாவுக்கரசரோ திருக்கயிலையை ஐயாற்றிற் கண்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநொடித்தான் மலையுத்தமனைப் பாடிக்கொண்டே திருக்கயிலையை யடைந்து சாமீபம்பெற்றார். காரைக்கால்

அம்மையாரோ கயிலையம்பதியில் சிவபெருமானைத் தரிசித்து இறவாத இன்ப அன்பைப்பெற்று, திருவாலங்காடு சென்று ஆண்டவன் அடியில் அமர்ந்திருக்கிறார். ஆனால் தாங்கள் கயிலை சென்று, ஆண்டவன் அருள்பெற்று, அனைத்துலகும் இனிதுவாழ வேண்டி அருந்தவத்தைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளீர்கள். தங்கள் அருளாட்சி என்றென்றும் தழைத்தோங்குக.

சைவசமயத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும், தென்னாடு, வடநாடு இன்னும் எந்நாட்டிற்கும், வாரிவழங்கும் வள்ளலே! வருக! சமயமின்றிச் சமூகம் வாழமுடியாது என்ற அடிப்படையை யுணர்த்த, தேவாரத் திருமுறைப் பாடசாலை களும், சைவசித்தாந்த வகுப்புக்களும், பிரசார நிலையங்களும் கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டங்களும், சமய மகாநாடுகளும், சமயநூல்களும், செவ்வனே தோற்றுவித்துச் சிறப்புறத் திகழச் செய்த, சிவகுருமணியே! வருக!

சமஸ்கிருதத்திற்கும், தமிழுக்கும், சாஸ்வதமான தொடர்பு உண்டென்று பலர் கூறுகின்றனர். ஆயினும் தூயதமிழே எம் குறிக்கோள் எனச் சிலர் சீறுகின்றனர். இதன் நடுவில் "வடமொழியும், தேன் தமிழும் ஆனவன்காண்" என்ற அப்பர்பெருமான் திருவாக்கிற்கிணங்க இரண்டும் போற்றத் தக்க மொழிகளே என்பதையும், பாகுபாட்டினால் பயனில்லை என்பதையும் விளங்கச்செய்து தமிழுக்குத் தேவார பாடசாலையும் வித்துவான் வகுப்புகளும், சமஸ்கிருதத்திற்கு ஆகம பாட சாலையும், ஆராய்ச்சி நிலையமும் நிறுவி, இரண்டு மொழிகளையும் வளம்பெற வளர்க்கும் புலவோய்! வருக!

"ஆலயந்தொழுவது சாலவும்நன்று" என்று அன்றுகூறினார் ஔவைபிராட்டியார். ஆனால் இன்று அக்கருத்தையே மாற்றும் வகையில் ஆலயங்களின் அடிப்படைக் கொள்கைகளையும் மாற்றத் துணிந்தனர் ஒரு சாரார். தக்க தருணத்தில் தேவாலயங்களின் சீரையும், சிறப்பையும் விளக்கவேண்டி, கோவில்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தும், விழாக்களை வழுவின்றி கொண்டாடியும், ஆலய பரிபாலனத்தை அப்பழுக்கின்றி நடாத்தியும், மக்கள் மனத்தில் பக்தியை யூட்டி, அன்னார் மாசு நீங்கி மாண்புற வாழ வழி வகுத்த மாணிக்க மணியே வருக!

அறிஞர்கட்கும், ஆன்றோர்கட்கும், எளியோர்கட்கும், ஏனையோர்க்கும் தங்கள் சாத்திர தோத்திர வெளியீடுகள் தருமையாதீனத்தின் இணையிலாச் சிறப்புடைத் தொண்டுகளில் ஒன்றாகும்.

இன்னோரன்ன அரும்பணியாற்றும் நும்மை வரவேற்கும் இந்நாள் பொந்நாளாகும் எம்மனோர்க்கு.

திருக்கயிலை தோய்ந்த தங்கள் பொன்னார் திருவடிகளால் இந்நாடும், நகரமும் தூய்மையுற்றுச் சிறப்புடன் செழித் தோங்குக!

"மேன்மை கொள் சைவ நீதி, விளங்குக உலகமெல்லாம்"

## காரை மாகாண வேளாளர் மரபினர், காரைக்கால்

குவலயம் போற்றும் குருமாமணியே!

வாழையடி வாழையென வந்த திருக் கயிலாய பரம்பரை யாம் தருமபுர ஆதீனத்தில் தத்துவங்கள் இருபத்தைந்து என்று சொல்லுமாப்போலே இருபத்தைந்தாம் பட்டமாக அருளாட்சி செலுத்துகின்ற அருந்தவமணியே! ஆதீனம் தழைக்க, அறநிலையங்கள் வளர, அருள் வளம் கொழிக்க, தெருவெல்லாம் சிவமணம் கமழ, நற்பணிகள் பல புரியும் ஞானப் பெருந்தகையே!

கயிலாய பரம்பரைக் கயிலை மணியே!

தமிழ் நாடு முழுவதும் தலங்கள் பலசென்று வழிபடுவ தோடன்றி, கயிலைமலையானைக் காணவேண்டும் என்ற பெரு நோக்கம்கொண்டு எண்ணியதை இனிது முடித்த எங்கள் குருநாதா! முத்திப்பெருநாதனை வழிபட்டு வந்த புண்ணியத்தை அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்க எழுந்தருளியிருக்கும் தங்கள் பெருந்தன்மையை என்னென்று கூறுவது?

சைவமும் தமிழும் பரப்பும் மணியே!

பற்பல பணிகளைப் பாங்குடன் நடத்தும் நற்றவத்தோய்! "செயற்கரிய செய்வர் பெரியர்" என்ற திருவள்ளுவரின்

பொய்யா மொழிப்படி யாவரும் எளிதில் செல்லமுடியாத கயிலையங்கிரிக்குச் சென்று எளியோர்களாகிய எங்கள் மீது கருணைகொண்டு இங்கு எழுந்தருளியுள்ள தங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

பண்ணின் இசையாகி நின்ற பரமனைப் பலகாலும் வழி படும் தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து அருட்பணி புரியவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சு கின்றோம்.

## * இராமேச்சுரம்

## ஸ்ரீ கணேசன் வார வழிபாட்டு மாணவர்கள்

அருளாட்சி செய்யும் தருமை அரசே போற்றி !

தருமையம்பதியில் குருவாய் அமர்ந்து பற்பல வகையிலும் தெய்வ பக்தியை நாடெங்கும் பரப்பிவரும் தாங்கள் அண்மை யில் செய்த திருக்கயிலாய யாத்திரை இனிது நிறைவேறியது குறித்து மகிழ்ச்சியுறுகிறோம். தருமைக்குருபரனாக இருக்கும் தாங்கள் கயிலை கண்டது முதல் கயிலைக் குருபரனாகவே விளங்குகின்றீர்கள். தங்கள் தரிசனத்தால் கயிலைப்பெரு மானையே தரிசித்தபேறு பெற்றோம்.

இறைவனாலயம் தூய்மையாய்த்திகழ
நிறைபணிகள் பலபுரிந்தோய் போற்றி !!

தங்கள் அருளாட்சியில் ஆலயங்கள் சிறப்பாயும் ஆண்ட வனின் அருட்பாடலைப் பாடுவித்தும் மக்களிடம் பக்தியை வளர்க்கப் பல சமயச் சொற்பொழிவுகளை நடத்தியும், திருப்பணிகள் பல புரிந்தும் சிறப்புறத் திகழும்படிச் செய்யும் தங்கள் அருட்டிருத்தொண்டினைப் போற்றுகிறோம். தெய்வ வழிபாட்டால் தேசம் செழிக்கும் என்பதைத் தாங்கள் செய்து வரும் பஞ்சமுகார்ச்சனை, நவமுகார்ச்சனை, இலக்ஷார்ச்சனை,

---

*திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-ஆவது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் இராமேச்சுரம் எழுந்தருளிய ஞான்று 15—2—60 இல் சமர்ப்பித்த அன்பு மலர்கள்.

கோடி அர்ச்சனை முதலியவற்றால் நானில மக்கள் நன்குணர்ந்து தங்களைப் போற்றுகின்றார்கள்.

கல்விக்கோடைபுரி கருணை வள்ளால் போற்றி !!!

பழம்புகழைப்புதுக்க ஆதீன நிர்வாகத்தில் பல்கலைக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, தேவாரப் பாட சாலை, ஆகமப் பாடசாலை முதலியவற்றை நிறுவி சமய வாழ்க்கையைப் போதித்து செந்தமிழ்ச் சிறுவர்களை ஈடேற்றிச் சைவ சந்ததிகளாக வளர்த்துவரும் தங்கள் பெருங் கருணைத் திறத்தைப் பெரிதும் போற்றி தங்களை வரவேற்கிறோம். தங்கள் வரவு எங்கள் புண்ணியம்.

## இராமேச்சுரம் காசிமடம் ஊழியர்கள்

### திரு. தி. சுப்பராயன், விசாரணைதார்.

திருக்கயிலாய தரிசனம் கண்டு மீண்ட திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் கயிலை மலையானாக இங்கு எழுந்தருளும் பேற்றைப் பெற்ற நாங்கள் மகாசந்நிதானம் அவர்களுக்கு எங்கள் மட்டிலா மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ கண்ட பரமசிவன் நந்திதேவர்க்கு அருளிய ஞானோ பதேச பரம்பரை அகச்சந்தான புறச்சந்தான குரவர் வழியே கயிலாய பரம்பரை என இன்று ஞானாதீனங்களாக விளங்கிவருவ தாக வரலாறு வாயிலாகக்கண்ட நாம் கயிலாயபரம்பரை ஆதீனம் தருமையே என்பதை இன்று கண்டுகொண்டோம். கயிலாய பரம்பரை விளங்கவந்த குருமணியே என வாழ்த்துகிறோம்.

சென்றகாலத்தின் பழுதிலாத்திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளப்பெற்ற பேறு இதனால் எற்றைக்கும் திருவருட்பேறு இவ்வுலகுக்கு இடையறாது கிடைக்கத் தருமையில் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு அருளாட்சி புரிந்துகொண்டு இமயம்போல் விளங்க வேண்டும் என்று மதுரைச் சோக்கநாதர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க திருக்கயிலாய பரம்பரை ! வாழ்க தருமையாதீனம் !! வாழ்க கயிலைக் குருமணி !!!

## இராமேசுவர தேவஸ்தானம்
## வார வழிபாட்டுக் கூட்டம் அலுவலர்கள்
## "பண்செய்"

தவநிலை ஓங்கும் தருமைக் குருவே வருக! வருக!
தத்துவ ஞானத் தனிப் பெருங் குருவே வருக! வருக!

அன்பினைப் பெருக்கி. அருமறைச் சிறப்பினை உலகெலாம் பரப்பி, ஆலயங்கள் பல அழகுறும் திருப்பணி செய்து, அடியார் வாழ ஆட்சி செலுத்தும் அருந்தவக் குருவே! தங்கள் வரவு நல்வரவாகுக!!

திருக்கயிலாய பரம்பரை வழி வழி தோன்றிய குருமகா சந்நிதானம் உலகெலாம் உய்ய திருக்கயிலாயம் சென்று கயிலாய நாதனைத் தரிசித்து சிவப்பிரசாதத்தை அடியார்கட் கெல்லாம் வழங்கி வரும் தங்கள் வரவு எங்கள் தவப் பயனாகும்.

தருமையம்பதியில் குருவாய் அமர்ந்து பற்பல வகையிலும் தெய்வ பக்தியை நாற்றிசையும் பரப்பி, சைவ சமயத்திற்கும், அடியார்கட்கும் புத்துயிர் அளித்து வரும் குருமகாசந்நிதானம் மனித இயல்பில் எளிதில் அடையமுடியாத திருக்கயிலாய யாத்திரையும், கங்கா யாத்திரையும் இனிது முடித்து. மாபெரும் இராமேசுவரத் தலத்தின் கண் இறைவனும் இராமநாதப் பெருமானுக்குக் கங்காபிஷேகம் செய்து வழிபட இங்கு விஜயம் செய்திருக்கும் குருமகாசந்நிதானத்தைத் தரிசித்தும் வழிபாட்டில் பங்குகொண்டும் ஆசியுரைகள் கேட்டும் நாங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன் பெற்றோம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் இராமேசுவர விஜயத்தின் போது ஆசிகூறி அருளிச் செய்தபடி ஆலய அலுவலர்களால் "பண்செய்" என்ற பெயரால் வழிபாட்டுக் கூட்டம் தொடங்கி மூன்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது. சிறந்த அபி விருத்திகளைக் காணவிட்டாலும், குறைந்த பேர்களைக்கொண்டு நிறைந்த பக்தியுடனும் விடாமுயற்சியுடனும் தொடர்ந்து நடை பெற்றுவருகிறது. குறிப்பாக அதிகமான பள்ளிச் சிறுவர்கள், சிறுமியர்கள் பங்கு எடுத்துக்கொண்டுள்ளது போற்றற்குரியது.

மேன்மேலும் வளர்ச்சிபேற்று இந்த ''பண்சேய்'' வளர்ச்சி பேற குருமகாசந்நிதானத்தின் வருகையும், ஆசியும் துணை புரியுமெனக் கருதுகிறோம்.

இராமநாதப் பெருமானை வழிபட்டு பூர்த்திபேறும் குருமகா சந்நிதானத்தின் திருக்கயிலாய யாத்திரையின் நன்னாளில், பக்தியுடனும், பணிவுடனும் அன்புடனும் அளிக்கும் எங்கள் வரவேற்பை ஏற்று ஆசிகூறி அருளப் பிரார்த்திக்கிறோம்.

### * குத்தாலம் ஆனந்தவல்லி நினைவு நூலகத்தினர்

திருவில்லி புத்தூர் திகழ்தரத் தோன்றித்
திருவா ரூரில் தீட்சை பெற்றுத்
தரும புரத்தில் திருமடம் கண்ட
குருஞான சம்பந்தர் திருவழித் தோன்றல்
கருணை வடிவாய்க் காட்சி தந்து
குமர குருபரர்க் கருளிய செம்மால்!
அமர முனிவன் அருள்மாசிலா மணி
சற்குரு நாத தகைமையில் ஒளிர்வோய்
எற்புத் துளைதோறும் இன்பம் பெருக
அற்புதக் கூத்தினை ஆடும் இறைவன்
போற்போது முதலாப் பற்பல நகரினில்
அறக்கட் டளையருள் அருள்நந்தி முனிவர்பால்
சிறப்புயர் அருளும் மறப்பரும் கேண்மையும்
அன்பும் மதிப்பும் என்றும் கோண்ட
சந்நிதா னமாத் தழைவுறும் தகைமையோய்
மூவர் பாடிய முதுபதி யாவினும்

---

* திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலமேனும் திருத்துருத்தி ஸ்ரீ உக்தவேதீஸ்வரப்பெருமானின் பெருஞ்சாந்தி விகாரிஹு தைமீ 19உ (1—2—60) சோம வாரத்தன்று தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் போன்னார் திருவடிகளில் குத்தாலம் இராமபுர அக்கிரகார ஆனந்தவல்லி நினைவு நூலகத்தினர் (தமிழகச் சமய, சி. ப. சி. கோவிந்தராசலு, சி. ப. சி. பாலு போறுப்பாளர்கள்) நன்மலர் தூவி அடிபணிந்தளித்த வரவேற்பிதழ்.

பாவம் போக்கும் பாகீ ரதியாய்
சோழ புரத்தில் தோடரிலட் சார்ச்சனை
முறைபெறச் செய்யும் முனிவர் கோவே
வண்டுபண் பாடக் கெண்டைகள் பாய
மான்மறி துள்ள, வானமயில் ஆட
தேன்சுனை நீல மொட்டலர் கின்ற
கேதார நாதன் பாதார விந்தம்
ஆதார மாக அடைந்துளம் உவந்தோய்
நாவலந் தீவில் நல்வட திசையில்
நாவலர் போற்ற நயமுடன் திகழ்வதும்
கங்கை முதலாக் கவின்நதி தோன்றி
எங்கும் பரவி எழில்வனப் புடையதும்
நீள நீள நெகிழ்ந்துமேல் ஏறி
மீள இரங்கிச் சுழன்று விரிந்து
பனியின் மண்டிப் பலகற் செறிந்து
நனிமிகு துயர்தருந் துனிவழி உடையதும்
மனத்தில் தூய்மை அன்பு மலிந்தோர்
இனத்துடன் சிவசிவ எனமொழிந் தொலிப்பதும்
தேவ தேவன் சிவ பெருமானும்
மேவி வாழ்வதும் ஆகிய கைலையை
அடைந்து வணங்கிய அருண்மிகு பெரியவ!
கோடைமிகு பொன்னி நதியின் தென்கரை
புகழ்பெறு தருமைப் புனிதநன் மடத்தில்
அகமகிழ் பூப்ப அரசுவீற் றிருக்கும்
புண்ணிய குருவே! புகழ்மேம் பெறுந!
எண்ணரும் சைவ! எங்கள் தலைவ!
சுப்பிர மணிய ஞானசம் பந்த!
திப்பிய சொரூப! தெய்வ நாயக!
வான்கவான் சாந்தம். தேனிருல் தொடுக்கக்
கான்மலி குடவரை தானுதித் தோடி
மன்பதை காக்கும் தீம்புனல் நிறைதரு
பொன்னி மாநதி தென்கரைப் பதிகளில்
துருத்தி என்னும் தூய குத்தாலத்தில்
இராமா புரமெனும் அக்கிர காரத்தில்
முத்துராம லிங்கன் முதலில் தொடங்கி
வைத்த பெருமை வாய்ந்தநூல் நிலையம்

ஆனந்த வல்லி நூல்நிலை யம்அதில்
தேனென மிளிர்தமிழ்ச் சுவையை மாந்தித்
தமிழரசு வேண்டிக் கழகம் பேணும்
மா. போ. சியோடு அண்ணு துரையும்
சுந்தரேச வாண்டையார் முதலிய பெரியரும்
வந்து நல்லுரை வழங்கிய நிலையம்
ஊர்ப்போது மக்கள் ஊக்கமாய் வந்து
நூல்பல படிக்கும் மேல்நிலை நிலையம்
அத்தகை நிலையம் தனக்குத் தாங்களும்
பற்பல நூல்கள் அவ்வப் போது
வழங்கி வளர்த்த வள்ளால் வாழி!
மன்னிய துருத்தி ஆலயம் பேணிக்
கும்பாபி ஷேகம் குயிற்றுவோய் வாழிய!
வாழி வாழி நீடூழி வாழியவே!

---

## EXTRACT FROM VISITORS' BOOK

### Dharmapura Adhinam
### Sri Amirthakateswaraswami Devasthanam
### Tirukkadaiyur.

சிவகாசி கூட்டு வழிபாட்டு சங்கம் ஸ்தலயாத்திரைக் குழுவின ருடன் இன்று திருக்கடையூர் அமிர்தகடேசுவரசுவாமி அம்மன் கோயில்களை வலம் வந்து வழிபாடு செய்தோம். மூர்த்திகளெல்லாம் கண்கோள்ளாக் காட்சி அளித்தார்கள், அர்ச்சகர்கள் முறைப்படி வழிபாடு நடத்திவைத்தார்கள். கோயில் தென்னுட்டு ஆலயங்களுக் கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாகத் தோற்றமளிக்கிறது. இவ்வளவு சிறந்த முறையில் கோயில் நிர்வாகம் நடப்பாற்றுகின்ற காரணஸ் தர்களான தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தமிழ் மக்கள் என்றென்றும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறுர்கள். அவர்களோடு பிச்சக்கட்டளை தருமகர்த்தா திருவாளர். கனகசபை பிள்ளை அவர்களுக்கும் நன்றி கூறவேண்டும். அவர்கள் எங்கள் குழுவினருக்குச் செய்த உபசாரங்களுக்கு நாங்கள் பிரதி உபகாரம் செய்ய வகையறியோம். எல்லாம்வல்ல இறைவனையும் இறைவியை யும் வணங்கி அப் பெரியோர்களுக்கு சகல நலன்களையும் பாவிக் கும்படி இறைஞ்சுகின்ருேம்,

S. நடராஜ நாடார்,
ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி
சிவகாசி கூட்டு வழிபாட்டு
ஸ்தல யாத்திரைக் குழுவின் தலைவர், 12—2—60

திறன் ஆய்வு :

# தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 19 இதழ் 3 பக்கம் 167 இன் தொடர்ச்சி)

## எண். 4. திரிபதார்த்தருபாதி தசகாரிய அகவல்

இயற்றியவர் :- தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். வெளியிட்டோர் :- 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆணைப்படி ஆதீன அடியவர் வித்துவான், ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் மேற் பார்வையில் சீகாழி வித்துவான், திரு. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் அச்சிடப்பெற்றது. முதல் பதிப்பு 1927.

**ஸ்ரீ குருஞானசம்பந்தர் :** தென்னாட்டில் மிகப் பெரிய சமய ஸ்தாபனமாக விளங்கும் தருமையாதீனத்தைத் தோற்று வித்த முதற் குருமூர்த்திகள். திருக்கயிலாயத்தில் இறைவன் அருளிய உபதேச பரம்பரை அகச்சந்தான புறச்சந்தான குரவர்களின் மூலமாய்க் கமலைஞானப்பிரகாச தேசிகர் வழியே குருஞானசம்பந்தரால் தருமையில் கி. பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலைபெறுத்தப்பெற்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் பாண்டி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றியவர். தந்தை சுப்பிரமணியப் பிள்ளை. தாய் மீனாட்சியம்மை. மரபு கார்காத்த வேளாளர். இளமையிலேயே இருமொழி வல்லுநராய் விளங்கிப் பதினாறும் ஆண்டில் சிவபோதமெய்தி தாயும் தந்தையுமாய் விளங்குபவன் இறைவனே என உணர்ந்து மதுரையில் சோக்கநாதரை வழிபட்டு வந்தனர். சோக்கேசன் பொற்றாமரை வாவியுள்ளிருந்து குருஞானசம்பந்தர் கையில் கண்ணுக்கினி யனைக் கைவரப்பெற்றுக் களிப்படைந்து இறைவன் கனவில் உணர்த்தியருளியபடி ஞானாசாரியரைத் தேடித் திருவாரூர் வந்து, கமலை ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்றுத்

திருவாரூரிலிருந்து குருநாதராணைப்படித் தருமையில் வந்து திருமடம் ஸ்தாபித்துச் சொக்கநாதர் வழிபாடும் தம்மையடைந்த பரிபாகிகளுக்கு உபதேசம் செய்தும் வீற்றிருந்தருளினார்கள். அவர்கள் அருளிய பண்டாரசாத்திர நூல்கள் பலவற்றுள் இந்நூலும் ஒன்று. குருஞானசம்பந்தர் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு உபதேசம் செய்து சிவ சமாதியில் எழுந்தருள. ஸ்ரீ ஆனந்தபரவசர் தீவிரதர பக்குவியா யிருந்தமையில் அவரும் சமாதிகூட மூன்றாவது குருமூர்த்தி களாக ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளை எழுந்தருளச் செய்து மீண்டும் சிவசமாதி கூடியருளினார்கள்.

**திரிபதார்த்த ரூபாதி தசகாரியம் :** தருமையாதீனப் பண்டார சாத்திரங்களில் ஒன்று. முப்பொருள்களாகிய பதி, பசு, பாசம் என்பவற்றின் உருவம் முதலிய பத்துக்காரியங்களை உணர்த்தும் நூல் எனப்பொருள்படும். இந்நூல் நிலைமண்டில ஆசிரியப்பாவாலானது. பாச தசகாரியம் :- சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம் சொரூபம், தெரிசனம், சுத்தி என்ற பத்தும் பாசத்தின் பத்துக் காரிய வகை கள். பசுதசகாரியம் :- சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம், சொரூபம், தெரிசனம், சுத்தி, லாபம் என்ற பதினொன்றும் பசுவின் காரிய வகைகள். பதிதச காரியம் :- சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம், சொரூபம், தெரிசனம், வியோகம், போகம் என்ற பதினொன்றும் பதியின் காரியவகைகள்.

தசகாரியங்களைத் தனியே இன்ன என ஒவ்வொன்றாய் விளக்கிச் செல்கிறது நூல். மற்ற தசகாரிய நூல்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு இந்நூலுக்குண்டு. ஏனைய நூல்கள் உண்மை என்றுரைக்கும் காரியத்தை ரூபம் என்றும், பதி காரியத்தில் சுத்தி என்றதைச் சிவபோகம் சிவயோகம் எனவும் கூறுகின்றது இந்நூல்,

குருஞானசம்பந்தரின் குருபக்திக்குச் சான்றாக இந்நூல்,

" தேசிக சிகாமணி தென்கம லாபுரி
நாசமில் சீர்த்தி ஞானப்பிர காசன்
அருளிய அட்ட வணையின் அடைவே
பெரிதும் பயனுறப் பேசினன் அறியவே "

என்ற தொடர்களால் நிறைவுறுகிறது.

## எண். 5. சித்தாந்த நிச்சயம்


இயற்றியவர் :- தருமையாதீனம் 9 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள். வெளியிட்டோர் :- 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி ஆதீன அடியவர் வித்துவான், ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மேற்பார்வையில் சீகாழி வித்துவான், திரு. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் அச்சிடப்பெற்றது. முதற் பதிப்பு 1928.

**ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் :** தருமை ஆதீனத்து ஒன்பதாவது குருமூர்த்திகளாக விளங்கிப் பல அற்புதங்களைச் செய்தவர்கள். வைணவனொருவன் இவர்கள் திருமுன் திருமாலே பரம்பொருள் என உரையாடி ஊமையாயினன். பின்னர் ஊமை தெளிவிக்கத தெளிந்தனன். பூனை, கிளி, குயில். பாம்பு. எலி என்பவற்றிற்கு அஞ்ஞானம் நீக்கி மெய்ஞ்ஞானமளித்த அருளாளர் இவர்கள். படிக்காசு புலவர் இவர்களின் சீடர். காலம் 17 ஆம் நூற்றாண்டின் இறுதி.

**சித்தாந்த நிச்சயம் :** தருமையாதீனப் பண்டாரசாத்திரங்களில் ஒன்று. கட்டளைக் கலித்துறைப்பாவாலாகியது. 97 பாடல்களை உடையது. குருமுகமாகக் கேட்டருளிய உபதேச மொழிகளை உடையது. இந்நூலுள் சிறப்பாக ஆணவத்தின் மூவகை நிலைகள் கூறப்படுகின்றன. ஆணவமலத்தின் உண்மையையும், அதன் உருவங்களையும், உயிர்களையும் தன்னையும் காட்டாத அதன் நிலைமையையும் விளக்குகிறது.

இந்நூல் ஏகான்மவாதிகள் கூறும் ஐக்கியத்தையும் அகச் சமயிகளுட் சிலர் கூறும் சிவசமவாதத்தையும் கடவுளது அவிகார வாதத்தையும், பரிணாம வாதத்தையும், சிவாத்துவிதத்தையும் ஒவ்வாதன மறுத்து, சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பரஞானத்தை உணரக் கூறலின் சித்தாந்த நிச்சயம் எனப் பெயர்பெற்றது. வேத சிவாகமங்களில் வாசீகமுனிவர் முதலிய ஞானப்பெருஞ்செல்வரது கருத்துக்களைத் தழுவி, ஆணவமலத்தின் இயல்புகளையும், அதுநீங்கும் வழிகளையும், விரிவாகக் கூறுகிறது. இந்நூலில் ஐந்தாம் பாடலை நோக்குமிடத்துத் தருமையாதீனத்தில் உபதேச முறையாக வந்த செய்தி கூறப்படுவதை அறியலாம்.

இராமேஸ்வரத் தல யாத்திரை :



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இராமேஸ்வரத்தில் உள்ள திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் கோலு வீற்றிருந்து ஆசி வழங்குதல்

இராமேஸ்வரத் தல யாத்திரை :



தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள்
இராமநாதர் ஆலயத்தில் வழிபாடு முடித்துத் திரும்ப எழுந்தருளல்

## எண். 6. சம்பிரதாய தீபம்.

இயற்றியவர் :- ஸ்ரீ சிவானந்த முனிவர். வெளியிட்டோர் :- தருமையாதீனம் 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிர மணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆணைப்படி, ஆதீன அடியவர் வித்துவான், ஸ்ரீமத் சட்டைநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் மேற்பார்வை செய்யப்பெற்று சீகாழி வித்துவான், திரு. ப. சு. முத்துத்தாண்டவராயப்பிள்ளை அவர்களால் அச்சிடப் பெற்றது. முதற்பதிப்பு 1928. 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி முதுபெரும்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் ஆராயப் பெற்று வெளியிடப்பெற்றது. இரண்டாம் பதிப்பு 1956.

**சிவானந்த முனிவர் :** இம்முனிவர் பிரான் எட்டாவது குருமூர்த்திகளாக இலங்கிய ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள் காலம் முதல் பத்தாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் காலம் வரை இருந்ததாக இவரியற்றிய நூல்களால் அறியப்படுகிறது. இவர்கள் இயற்றிய நூல்களாகச் சம்பிரதாய தீபம், சிவானந்த போதசாரம், சிவானந்தமாலை முதலியன அச்சிடப்பெற்றுள்ளன. காலம் 18 ஆம் நூற்றுண்டு.

**சம்பிரதாய தீபம் :** குருமரபுசம்பிரதாயம், சாத்திரசம் பிரதாயம் குருபீடசம்பிரதாயம் என்ற மூன்றுபிரிவுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 244வெண்பாக்களைக்கொண்டு விளங்குகிறது. இந்நூலில் உள்ள குறிப்பு ‘ திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துப் பத்தாவது குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர் காலத்துக் ( கி. பி. 1740 ) காசியம்பதி முத்திமண்டபத்தே அன்னுர் திருமுன்னர் சிவானந்த முனிவர் என்பார் புறச்சமயத்தார் சைவசமயப் போருட்குக் கூறும் தடை களை மறுத்துத் தமது பீடாதிபர் பரம்பரையின் வழங்கிவந்த சாம்பிரதாயக் கோள்கைகளை இந்நூலின்கண் தெளிவாக வரை கின்ருர் ’ என்ற குறிப்புக் காணப்படுகிறது. இஃதொன்றே இந் நூல் நுவல் போருள் இன்னவென அறிதற்குப் போதுமானது. இரண்டாம் பதிப்பு அரும்போருள் விளக்கத்துடன் வெளிவந் துள்ளது.

(தொடரும்)

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நிகழ்த்திய

# இராமேசுவர யாத்திரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள்

ஆதீனம் சூப்பரின்டேண்ட்டேண்ட், தேவஸ்தானம் பிரிவு.

கோடிமா தவங்கள் செய்து குன்றினர் தம்மை யெல்லாம்
வீடவே சக்கரத்தா லெறிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே.

யாத்திரை செய்துசெய்து அதன் இன்பத்தைக்கண்டவர்கள் தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீல்ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். 'இமயம் முதல் கன்னியாகுமரிவரை' என்று நம் பாரத நாட்டு யாத்திரையைச் சிறப்புறச் சொல்வார்கள். அநேக மாக எல்லாப் பெருந்தலங்களையும் தரிசித்து வந்து அப்பாலும் எல்லை கடந்த இமயத்தின் மணிமுடியாகிய கயிலையையும் தரிசித்து ஆரா இன்பம் பெருக்கி மகிழ்பவர்கள். அந்தப் பெரிய யாத்திரை முடிவில் இராமேஸ்வரம் யாத்திரை செய்ய வேண்டுமென்ற திருவுளக் குறிப்பும் தோன்றியது. தாம் பெற்ற இன்பம் மற்ற மக்களும் பெறவேண்டுமென்ற பெரு விருப்பால் அவ்வப்போதும் பலர் புடைசூழ யாத்திரை செய்து வருகிறார்கள் என்பது அன்பர்கள் அறிந்ததே. அதுபோலவே இப்போது இராமேஸ்வரத்துக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் யாத்திரை எழுந்தருள இருப்பது அறிந்த சைவநல்லன்பர் உடன்வரப் புறப்பட்டனர்.

இராமேஸ்வரம் துவாதச ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்களுள் ஒன்று. பாடல்பெற்ற பாண்டிப்பதிகளுள் ஒன்று. இராமர், இராவண யுத்தம் முடித்து தன்னைப்பற்றிய பிர்மகத்திதீர பிரதிஷ்டை செய்து வழிபட்ட பெருமையுடையது என்பது அன்பர்கள் அறிந்ததே. அன்று திருஞானசம்பந்தப்

பெருமான் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன், மங்கையர்க்கரசியார், அவர்கள் மந்திரிகள், அடியார்கள் புடைசூழ இராமேஸ்வரம் தரிசனத்துக்கு எழுந்தருளி வழிபட்டார்கள். பதிகம் பாடினார்கள். இன்று தருமை ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானம் அவர்கள் சைவமெய்யன்பர்கள் புடைசூழ எழுந்தருளி வழிபட்டு தலப்பதிகங்களைப் பாடுவித்து எல்லோருக்கும் உய்யும் வழி காட்டியருளினார்கள்.

14—2—60 ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தருமையை விட்டு எழுந்தருளி நேரே அன்பிலாலந்துறை, தவத்துறை, திருமாந்துறை திருப்பாற்றுறை முதலிய பாடல்பெற்ற தலங்களையும் வழிபட்டுத் திருச்சியில் சிறிது ஓய்வுகொண்டு அன்றிரவே இராமேஸ்வரத்துக்குப் புறப்பட்டார்கள். அவ்வத்தலங்களிலும் நடந்த சிறப்பும் வழிபாட்டில் உண்டாகிய திருவுளக்குறிப்புக்களும் விரிவாகப் பின்னே வெளியிடுதல் அன்பர்களுக்கு நற்பயன் அளிக்கும் என்ற கருத்தில் அதைவிட்டு ஒரு சில சொல்லி இராமேசுவர யாத்திரைபற்றிய குறிப்புக்கள் இதில் சொல்லப்படுகின்றன.

நிகழ்ச்சிகளில் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியது திருத்தவத்துறையாகிய, லால்குடியில் நடைபெற்றதாகும். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் அங்கு வழிபாட்டுக்கு எழுந்தருளும் செய்தி அறிந்து அன்பர் திரு. கு. கனகசபாபதிப்பிள்ளை, எம். ஏ., பி. டி., அவர்கள் (திருத்தவத்துறைக் கோவில் நிர்வாகக் குழுவின் தலைவராக இருப்பவர்கள்) அங்கு ஒரு சிறு நேரத்துக்குள்ளாகப் பெருங் கூட்டத்தைக் கூட்டி ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்தை வரவேற்று உடனிருந்து நல்லமுறையில் தரிசனம் செய்துவைத்தார்கள். கயிலாய நாதன் தரிசனம் முடித்துத் தம் ஊருக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் முதன் முதலாக அப்பொழுதுதான் எழுந்தருளுவதால் தம் குருநாதரைப் பாராட்டி வரவேற்க ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கோவில் உற்சவ மண்டபத்திலேயே ஏற்பாடு செய்திருந்தார்கள். முறையாக வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். காணிக்கைகள் செலுத்திக்கொண்டார்கள். இவ்வாதீனம் சென்னை சமயப்பிரசார நிலைய சுவாமிகள் வித்துவான் ஒடுக்கம், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முன்னுரை வழங்கினார்கள். அதில் இத்தலம் ஏழு முனிவர்கள் (சப்த ரிஷிகள்) வழிபட்டுய்ந்த

பெருந்தலம். ஆகையால் இங்குள்ள மக்கள் பக்தி பெருக ஆலய வழிபாட்டைச் சிறப்புற அமைத்துக்கொள்ளவேண்டும்; அதுவும் வார வழிபாடாக அமைத்துக்கொள்ளுதல் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். கோவில் நிர்வாகக் குழுவின் சார்பில் திரு. கு. கனகசபாபதிப் பிள்ளை அவர்கள் பேசுகையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் கண்டு பெருக்கி வரும் பக்தி அடிச்சுவட்டைத் தாங்களும் பின்பற்றி வருவதாகவும் சுவாமிகள் குறிப்பிட்டபடி வழிபாடுகள் அங்கு அடிக்கடி நிகழ்வதாகவும் அதனை உறுதிப்படுத்தி நல்ல முறையில் அமைத்து நடத்த மேலும் முயற்சிகள் எடுத்துக்கொள்வதாகவும் சொல்லி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானமவர்கள் அரிதில் கிடைக்கக்கூடிய கயிலைக் காட்சியைக் கண்டு வந்திருப்பதால் அவர்கள் இவ்வூருக்கு எழுந்தருளி வந்தது அந்த வட்டத்து மக்கள் செய்த நற்பேருகும் என்று சொல்லி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் ஆசி வழங்கியருளுகையில் அன்று திருஅன்பிலாலந் துறைக் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்திருப்பதாகவும் அவ்வூர் மக்களுக்கு மிக அண்மையில் உள்ள அக்கோயிலை இப்பொழுதுள்ள நிலையில் சிறு திருப்பணிகளாவது செய்து பெருமானுக்கு ஒரு கும்பாபிஷேகம் செய்துவைப்பது சைவ நன்மக்களின் கடமையாகும் என்றும், இந்தத் தலத்தைத் (தவத்துறை) எழுவர் வழிபட்ட தவத்துறை என்றே அப்பர் பெருமான் குறிப்பிட்டிருப்பதாகவும் அந்த நல்ல பெயரைக்கொண்டு அவ்வூர் வழங்கப்படாமல் லால்குடி என்று வழங்குவதில் சிறப்பில்லை என்றும் அதன் உண்மைப் பெயர் கொண்டு அது மீளவும் வழங்க ஆவன செய்யவேண்டுமென்றும் பெருமானை வழிபட்டால்தான் மனிதன் தன்னை உயர்த்திக்கொள்ள முடியும், இகபரவாழ்க்கைக்கு வேண்டிய எல்லாம் அவ்வழிபாட்டால்தான் பெறமுடியும், அன்பு பெருகும், உய்வுக்கு வழிகாணலாம் என்று அருளிச் செய்து ஆலயத்தைச் செம்மையாகப் பேணிக் காத்து வரும் நல்லன்பர்களுக்கும் மற்றையோருக்கும் ஆசி வழங்கினார்கள்.

அன்றிரவு தனுஷ்கோடி பாசஞ்சரில் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகா சந்நிதானத்துக்கும் மற்ற அன்பர்களுக்கும் தனியே ஒரு

வண்டி சேர்த்து யாத்திரை தொடங்கப்பட்டது. வரவர அன்பர்கள் எண்ணிக்கை அதிகமாகவே அந்த வண்டியும் பற்றுமற்போக மற்ற வண்டிகளிலும் இடம் பிடித்துப் பயண வசதிகள் செய்யப்பட்டன.

மறுநாள் சோமவாரம். அன்று காலை 9-15க்கு வண்டி தனுஷ்கோடிக்குச் சென்று சேர்ந்தது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருவிராமேச்சுரம் யாத்திரை செல்லும் செய்தி தெரிந்த திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இராமேஸ் வரத்திலுள்ள கிளைமடத்துநிர்வாகி திரு சுப்பராயனுக்குவரவேற்க உத்தரவுகள் பிறப்பித்திருந்தார்கள். அந்த அன்பர் பாம்பன் இரயிலடியிலேயே ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்தைக் கண்டு வணங்க உடன் வந்திருந்தோருக்குக் காலைச் சிற்றுண்டிகளும் காப்பியும் வழங்கினர். தனுஷ்கோடியில் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானமும் உடன்வருவோரும் தங்க உரிய முறையில் வரவேற்றுபசரிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்துவைத்திருந் தார்கள். இராமேசுவர ஆலய ஊழியர் “ துவாதசாந்தத்தை ” தனுஷ்கோடியில் நிறுத்தி எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் செய்திருந்தார். அன்று தொடங்கிய ஸ்ரீ காசி மடத்துபசரிப்பு ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்தில் தரிசனம் முடித்து மீண்டும் இரயில் ஏறும்வரை சிறப்பாகவே உரிய காலத்தில் அதுதுவும் நடைபெற்றன. எல்லோரும் பாராட்டும் முறையில் அவ் வவருக்கும் வேண்டிய எல்லா வசதிகளையும் இன்முகத்தோடு செய்து பாராட்டுதல்களைப் பேற்றுர் இராமேஸ்வரம் ஸ்ரீ காசி மடத்து நிர்வாகி சுப்பராயன்.

தனுஷ்கோடியில் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்துடன் எல்லா அன்பர்களும் சென்று தீர்த்தமாடினுர்கள். நடுப்பகல் உணவு முடிந்ததும் இலங்கை செல்லும் கப்பல் துறையையும் கப்பலையும் பார்க்கவேண்டுமேன்று உடன்வந்தோர் ஆசைப்பட் டனர். ஒரு தனி வண்டியில் ஏற்பாடாகிச் சென்று கண்டுவந்தார் கள். அன்று மாலையே இராமேசுவரம் சென்றடைந்தார்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள். அங்கும் இரயிலடியில் கோவில் பிரசாதங்கள் அருளிப்பாட்டு முறையில் ஏற்பாடு செய்துவைத்து சுப்பராயன் ரயிலிலேயே ஸ்ரீலஸ்ரீ கயிலைமகாசந்நி தானத்தை வணங்கி வரவேற்றுர். சந்நிதித்தெருவில் உள்ள ஸ்ரீ காசி மடத்துக்கு எழுந்தருளியதும் உரிய முறையில்

கொலுவிருத்தி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்கு வழி பாடுகள்செய்தார்கள். திருமஞ்சனம் ஆனதும் ஸ்ரீலஸ்ரீகயிலைமகா சந்நிதானத்தில் திருக்கோயில்வழிபாட்டுக்கு எழுந்தருளினார்கள். ஆலயநிர்வாக அதிகாரி முதலியோர் உடனிருந்து வழிபாடுகள் சிறப்பாக நடத்திவைத்தார்கள். வழிபாட்டு முடிவில் ஆலய ஊழியர்கள், நிர்வாகிகள் சார்பில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்துக்கு ஒரு வரவேற்பு நடத்தப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் ஆசி வழங்கி முன் ஒரு முறை அங்கு எழுந்தருளியபொழுது அவர்களுக்குச் செய்த உபதேசத்தின் பலனாக அங்குக் கோயில் ஊழியர் வார வழி பாடுகள் நடத்திவரும் செய்தி அறிந்து மகிழ்ச்சி தெரிவித்து இதன்மூலம் அவ் ஊழியர்கள் தங்களைச் செம்மைப்படுத்திக் கொள்வதோடு வருகின்ற அன்பர்களுக்கும் வழிகாட்டிகளாக விளங்குவதைப் பாராட்டி ஆசி வழங்கினார்கள்.

மறுநாட்காலையில் (16—2—60) முக்கியமான எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனம் ஆகிப் பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் ஸ்ரீ காசி கங்கை முதலியனகொண்டு சிறப்பு அபிஷேகங்களும் அருச்சனையும் செய்து மகிழ்ந்தார்கள். அன்பர்களுக்கு ஆலய நிர்வாகிகள் பெருமானுக்குச் சார்த்தும் திருவாபரணங்கள் முதலியவற்றை எடுத்துக்காட்டி இராமநாதர் அருளாலும் பொருளாலும் சிறப் புற்று விளங்குவதைக் காட்டினார்கள். அன்று காலையில் ஸ்ரீ காசி மடத்தில் (இராமேஸ்வரம்) தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் வார வழிபாட்டுக் கழகப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா, M. A., சென்னை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வார வழிபாட்டுக் கழகத் தலைவர் திரு. B. திருஞானம் பிள்ளை மதுரை சிவதர்மபாஸ்கர சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டர் முதலியோர் பேசினர்.

அன்று மாலையே இராமேசுவரம் தரிசனம் முடித்துக் கொண்டு ஊர் திரும்பலாயிற்று. இரயில் புறப்பட சிறிது நேரம் இருக்கும்போழுதே இரயிலடிக்கு வந்துவிட்டபடியால் அந்தச் சிறிது நேரத்தை வீண் போழுதாகப் போக்காது திருமுறை ஓதுவார்களைக்கொண்டு திருமுறை ஓதச் செய்து வழிபாட்டால்

வரும் இன்பத்தைப்பற்றி உடன் வந்திருந்த அன்பர்களைக் கொண்டு விளக்கவும் செய்தார்கள் அங்குக்கூடி இருந்த மக்களுக்கு.

இந்த வழிபாட்டில் மாயூரம் தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் வாரவழிபாட்டுக்குழுவின் தலைவர் திரு. B. திருஞானம் பிள்ளை B. A., B. L., அவர்கள், செயலர் திரு. K. கிருஷ்ண மூர்த்திப்பிள்ளை, பொருளர் திரு. M. A. ஜகந்நாத பிள்ளை, வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி நவரத்தினக் கவசக் கமிட்டித் தலைவர் திரு. T. S. தியாகராஜ அய்யர், மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலய பிரதம பட்டர் சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டர் அவர்கள், திருச்சி திருக்குறள்வேள், G. வரதராஜப் பிள்ளை அவர்கள், காட்டுமன்னார்குடி நாட்டுச் சின்னப்பண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை அவர்கள், சிதம்பரம் திரு. G. சபாபதிப் பிள்ளை அவர்கள் முதலியோர் அவ்வவர் குடும்பத்தோடு வந்திருந்தார்கள். வார வழிபாட்டுக் கழகத்தினர் எல்லா வழிபாடுகளிலும் கலந்துகொண்டார்கள் வந்திருந்த அன்பர்கள் எல்லாம் ஒவ்வொருவழியில் சிறந்தவர்களாதலால் இந்த யாத்திரை பேச்சாலும் செயலாலும் சிறப்பாக நடைபெற்றது. திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எல்லா வசதியும் தக்க உயரியமுறையில் ஏற்பாடு செய்ய உத்தரவிட்டிருந்தது தான் யாத்திரை சிறப்பாக நிகழக்காரணமாயிருந்தது என்று கூறி உடன் வந்த சைவமெய்யன்பர்கள் யாவரும் பெருமிதம் அடைந்தார்கள்.

இந்த யாத்திரையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்கும் உடன் வந்திருந்த அன்பர்களுக்கும் எல்லாவிதமான வசதிகளைச் செய்துகொடுப்பதில் பெரும் கவலைகொண்டு சிறப்பாகச் செய்துகொடுத்தவர்கள் இரயில்வேயில் உதவிப் போக்குவரத்து மேற்பார்வையாளராக இருந்துவரும் நல்லன்பர் திரு. R. ஆறுமுகஞ் செட்டியார் அவர்கள். அவர்களுடைய உதவியால் ஆங்காங்கும் இரயில் ஊழியர்கள் எல்லாவிதத்திலும் அவரவராலும் முடிந்த எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்துகொடுத்துச் சிறப்புறச் செய்தார்கள் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆசிகள்.

# கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும்

பெருஞ்சொற்கொண்டல், முத்தமிழ் வள்ளல்

**புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்கள்**

(மலர் 19. இதழ் 3. பக்கம் 162 இன் தொடர்ச்சி)

### 1. தசரதன் உயிர்நீத்தது ஏன் ?

மன்னவன் மதிக்கின்ருன், வதிட்டமாதவன் வாசகத்தலோ மந்திரி சுமந்திரன் தந்திரத்தாலோ மொய்த்துள மக்கள் முறையீட்டினுலோ, திருமகன் மறுபடி திரும்பின் திரும்புக. யான் அழைப்பித்து வனம் புகாதே எனக்கூற வழியில்லே. அப்படிக் கூறின் வாய்மை மடியும். அவன் விரதரூபத்தைக் காணின் மரபியல் மடிகிறது. மரபோ வாய்மையோ யான் தேடிய பொருள்களோ? மனுமுதலோர் தேடியவும் என்போல எத்தனேயோபேர்களேக் காணவல்லனவுமான வான்பொருள்களா என் காலத்தில் மாள்வது? மன்னறம் வாழ்க என்னுயிர் வீழ்க என எண்ணினுன் ஏந்தல். ('மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கைப் பெருந்தகைமைப் பீடழியவந்தவிடத்து'').

இங்குத் தருமங் காக்க மன்னவன் சாதித்த சாதனேயோ மிகப் பெரியது. அது யாராலும் எண்ணவும் எட்டாதது. நகரமாந்தரெல்லாம் நம்பியைப் பிரிய மனமின்றிப் பின் தொடருகின்ருர்கள். அப்பெருநகரில் ஒரு ஆண் பெண், குட்டி குழந்தையும் நிற்காமல் பின் தொடருகின்றனவாம்: அங்கு நின்றவர், சுவறுகளில் எழுதிய சித்திரங்களில் உள்ள ஆண் பெண் ஓவியங்களும் மன்னவனேக் குற்றுயிர்க்கிடக்கையில் விட்டகல வழியின்றி வருந்தும் தேவியருந்தானும். ஓவியங்கள் உயிரின்மையால் தொடரவில்லேயாம். ஒண்டொடிகள் உயிர்க்காதலன் கிடக்கையால் தொடரவில்லேயாம்.

'' ஏவியகுரிசில்பின்யாவர்ஏகலார்-மாவியல்தானேயம்
மன்னே நீங்கலாத்
தேவியர்ஒழிந்தனர் செல்வமாநகர்-ஓவியம் ஒழிந்தன
உயிர் இலாமையால் ''

இது கம்பர் கூற்று. இப்படி நாட்டவரும் நகரவரும் பற்றிவிடாத பரமனைப் பரிந்தோம்பிப் பெற்ற மன்னவன் தோடராமைக்குக் காரணமென்ன? பரிவில்லாமையினுலா? அல்லது இச்சிறு பிரயாணத்தை முடித்துக்கோண்டு வரட்டுமே; வந்த பிறகுதான் ஆறஅமரப் பார்க்கலாமே என்ரு? அப்படி யல்ல நாம்தான் இறக்க முடிவுகோண்டோமே; இனி, நமக்கு மகன்தான் என்ன, மனைவியர்தான் என்ன, என்ற வெறுப்பினுலா? அவ்வேந்தனுக்கு எல்லோரினும் இனியனுன வேல்வேந்தன் அன்பு அத்திரளான மக்கள் எல்லோரன்புஞ்சேர்ந்தாலும் ஈடு செய்யமுடியாத அளவு மிகுந்த அன்பாக அல்லவோ இருக்கும்? இப்படியிருக்க நகர மாந்தர் மொய்த்துத் தோடரும் நம்பியைப் பரிந்தோடிப் பற்றிக்கோள்ளமாட்டானு? இனி எந்த பிறப்பில் இப்படிச் சிறந்த உலகம் போற்றும் ஒருமகனைப் பேறப் போகின்றேன் என்றுப் பேதுற்றுக் கதறியழமாட்டானு? எல்லாம் சேய்வான் இறைவன். அவனுடைய கடைப்பிடி திருமகனை அணுகாதிருக்கவேண்டிய துன்பத்தையும் மேற் கோள்ளவேண்டியதாக விருந்தது. மரவுரியுடுத்திய மாமகனைக் கண்ணுல் கண்டாலே மரபு போய்த்ததாகும் எனக்கோண்டான் மன்னவன்.

‘ பூணுர் அணியும்முடியும் போன் ஆசனமும்குடையும்
சேணுர் மார்பும் திருவும் தெரியக் காணத்திரிவேன்
மாணு மாவற்கலையும் மானின்தோலும்அவைதான்
காணுதோழிந்தேன் என்னில் நன்ருய்த்தன்றேகருமம் ”

(நகர்நீ - 66)

அரசனுவானை அவலனுகக்காணேனேன்பது ஒன்றுடன் அறங்கேடாமல் தன் உயிரைக் கேடுத்துக்கோள்ள நினைத்த அவனின் தன் உயிரைத் தன் உடலில் நின்று பிரிக்கும். பேரும்படையாகக்கோண்ட சலபோசமுனியின் சாபமோழிதான் மகனைவிட்டு எத்துணை நீங்குகின்றனனே அத்துணைக் கூர்மை யாகவும், தான் நம்பியை நணுகநணுகத்தன் கூர்மை குறைந்து விடுவதாகவும் அமைந்ததாதலால் அச்சாபமோழிக்கு வன்மை யளிக்கவேண்டியே தனது அரும்பெருங்கண்மணியை அணு காமல் நின்ருன் மறங்கேடாமன்னவன்;

(தோடரும்)

# பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்

ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலைநகர்.

(மலர் 19 இதழ் 3 பக்கம் 164 இன் தொடர்ச்சி)

அணிலின் மேன்மயிர் செறிந்த தோற்றத்திற்கு இலவின் பசுங்காய் பஞ்சுடன் விரிந்துள்ள நிலைமையை உவமை கூறி யுள்ளார் உருத்திரங் கண்ணனுர்.

"நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணில்" (பெரும்பாண்)

என்பது காண்க. நீண்ட அடிப்பாகத்தையுடைய இலவ மரத்தின் அசைகின்ற கிளை ஈன்ற பஞ்சிணயுடைய பசுங்காய் பக்கத்தே விரிந்தாற்போன்று வரிகளை முதுகிலே உடைய அணில் என்பது பொருள். இலவங்காய் பக்கவாட்டமாக விரிந்து பஞ்சு பிதிர்ந்து தோன்றுவதுபோல உள்ளது அணிலின் வரிப்புறம் என்பது கருத்து.

தலைவன் பிரிந்தபோழுது தனித்து வருந்திப் போலிவழிந் திருப்பதற்கு உவமையாக அணிலாடு முன்றிலைத் தலைவி கூறியதாக ஒரு புலவர் கூற அவ்வுவமை நலத்தை யுணர்ந்த புலவர்கள் அப்புலவர்க்கு அத்தொடரையே பெயராக அமைத்து மகிழ்ந்துள்ளார்கள்.

"மக்கள் போகிய அணிலாடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்
றலப்பென் தோழி அவர் அகன்ற ஞான்றே" (குறுந் - 41)

என்பது காண்க. இவ்வாறு பாடிய புலவர் பெற்ற பெயர் 'அணிலாடு முன்றிலார்' என்பதே யாகும். மக்கள் யாரும் வாழாது போகிய தனிமை வீட்டில் அச்சம் இன்றி அணில் விளையாடும் அன்ருே? எனவே மக்கள் வாழாத போலிவழிந்த வீட்டிற்கு அணில் ஆடுதலைச் சிறந்த அடையாகக்கூறினுர் அப் பெரும்புலவர். இதனுல் அணிலின் அஞ்சும் இயல்பு புலனுகும்.

# 8. எலி

## வீட்டில் எலி

எலி, வீட்டிலும் வயலிலும் காட்டிலும் மேட்டிலும் அளை செய்துகொண்டு வாழும் இயல்பினது. வீடுகளில் உணவுப் பொருள்கள் மிக்கிருக்குமாயின் அங்கு விரும்பி வாழும். ஒரு வீட்டில் வறுமை மிகுதியால் உணவுப் பொருள்கள் யாதும் இல்லையாயின் எலி வேறு இடங்கட்குக் குடிபெயர்ந்துவிடும். பெருங்குன்றூர்க் கிழார் என்னும் புலவர், வறுமை மிக்க வீட்டைக் குறிப்பிடும்போது,

"வல்சி யின்மையின் வயின் வயின் மாறி
இல்லெலி மறந்த தோல்சுவர்" (புறநா - 211)

எனக் கூறியுள்ளார். உணவுப் பொருள் இல்லாமையால் இல்லில் இருந்த எலி அங்கு வருவதையே மறந்து வேறிடங் கட்கு மாறிச் சென்றுவிட்டது என்பதை இதனால் அறியலாம். 'இல்லெலி மறைந்த தோல்சுவர்' என்றமையால் எலி, அப்பழைய சுவரின் அடியில் முன்பு அளைசெய்து வாழ்ந் திருந்தமை அறியலாம்.

## வயலில் எலி

வயலில் நெல் விளைந்திருக்கும் சிறு பருவம் பார்த்து எலி வளைந்து விளைந்த நெற்கதிர்களைக் கவர்ந்துகொண்டு சென்று தன் அளை நிறையவைக்குமாம்,

"விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்" (புறநா - 190)

என்பது காண்க, நெற்கதிர் நன்றாக முற்றிவிட்டால் உழவர் அறுவடை செய்து எடுத்துக்கொண்டு போய்விடுவர்; விளையாத முன்னர் எலி கதிர்களைக்கொண்டுசெல்வதால் பயனுமில்லை; எனவே அறுவடைக்குமுன் கதிர் முற்றியதும் எலி கொண்டு அளையில் சேர்த்தற்குரிய காலம் சிறிது ஆகலின், 'சீறிடம்' என்றார். இடம் இங்குக் காலத்தை யுணர்த்திற்று. தம் ஊக்கத்தல் ஆக்கம் பெறாத சிறிய உள்ளமுடையவர்க்கு உவமையாக இவ் எலியைக் காட்டி இகழ்ச்சி செய்கின்றார் சோழன் நல்லுருத்திரனார். (தொடரும்)

| சிவாகமம் [சண்டீசர்] | ஆகம வித்துவான், திரு. S. சுவாமிநாத சிவாசாரியர், தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை, தருமபுரம். |
|---|---|

சிவபக்தரான சண்டீசர் நான்கு பேதமுடையர். யுகபேதத்தினுல் வேறுபட்ட பெயரையுடையவராக விளங்குகிருர்.

चण्डेश्वर श्चतुर्भेदः तत्भेदं वक्ष्यते क्रमात् ।
रुद्रचण्डः कृतयुगे त्रेतायां तु प्रचण्डकः ॥
द्वापरे वीरचण्डश्च ध्वनिचण्डः कलौयुगे ।

— वचनरत्नावलि

க்ருதயுகத்தில் ருத்ரசண்டன் என்றும் த்ரேதாயுகத்தில் ப்ரசண்டன் என்றும் த்வாபரயுகத்தில் வீரசண்டன் என்றும் கலியுகத்தில் த்வனிசண்டன் என்றும் பெயர். சிவபெருமானுடைய நடுக்கண்ணினின்றும் தோன்றியவர் ருத்ரசண்டன். வலது கண்ணினின்றும் உண்டானவர் ப்ரசண்டர். இடது கண்ணினின்றும் உண்டானவர் வீரசண்டர். அந்தணரின் புதல்வராகத் தோன்றியவர் த்வனிசண்டர் ஆவார்.

ருத்ரசண்டனுக்கு நான்கு திருமுகங்களும் நான்கு கைகளும் உண்டு. சூலம் அக்ஷமாலை, பரசு. கமண்டலு என்ற இவ்வாயுதங்களையுடையவர்ருத்ரசண்டன். இவர் அனந்தாதிகளுக்கு அடுதத நிலையில் கணேசர் என்ற கூட்டத்தில் வீற்றிருப்பவர். இறைவனுக்குச் செய்யப்படும் பஞ்சாவரண பூஜையில் மூன்ருவது ஆவரண தேவதையாக விளங்குபவர்.

ப்ரசண்டன், வீரசண்டன் என்ற இவ்விருவர்களும் ஒரு முகத்துடன் நான்கு கைகளையுடையவர்கள். சூலம், அக்ஷமாலை. டங்கம், கண்டி ஆயுதங்களை உடையவர் ப்ரசண்டர். சூலம் டங்கம் அஞ்சனியுடன் கூடியவர் வீரசண்டர்.

கலியுக மூர்த்தியான த்வனிசண்டரோவெனில் மழுவுடன் கூடிய கை ஒன்று; துடைமேல் வைத்துக்கோண்ட கை மற்ருென்று, ஆக இரண்டு கைகளையுடையவர். இதுபோலவே சூரியன் முதலானவர்களுக்கும் சண்டேசர் உண்டு.

तेजश्चण्डो रवौ चैव कुंभचण्डोविनायके ।
मित्रचण्डो गुहे चैवमुमायां यमनी तथा
ध्वनिचण्डः शिवे चैव पञ्चचण्डाः प्रकीर्तिताः ।

அதாவது சூரியனுக்கு தேஜச்சண்டன் எனவும் விநாயகருக்கு கும்பசண்டன் எனவும் சுப்ரமண்யருக்கு மித்ரசண்டன் எனவும் தேவிக்கு யமனீ சண்டி எனவும்: சிவனுக்கு த்வனிசண்டன் எனவும் மூலாகமங்களில் கூறப்படுகிறது.

பொதுவாகசண்டேச்வரஸ்தாபனமானதுஸ்வதந்திரசண்டர், பரதந்திரசண்டர் என இரண்டு விதமாக் கூறப்படுகிறது.

கிராமத்தின் ஆரம்பத்தில் அல்லது மத்தியில் அல்லது எண்திசைகளில் ஸ்தாபனம் செய்யப்படும் சண்டேசர் ஸ்வதந்திர சண்டேசர்.

ஆலயத்தின் கருப்பக்கிரஹத்தில் ஈசானபாகத்தில் அல்லது வடக்கில் அல்லது வடக்கு ஈசானம் இரண்டின் மத்தியில் அந்தர்மண்டபத்தில் அல்லது அந்தர்ஹாரத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் சண்டீசர் பரதந்திரர் என்று காமிகாகமம் கூறுகிறது. (அந்தர் மண்டலம் என்பது கருப்பக்ருஹத்தைச் சுற்றியுள்ள ப்ராகாரம், அந்தர்ஹாரம் என்பது ஆலயத்தின் முதற் பிராகாரம்)

சண்டிகேசர் விக்ரஹம், மத்யம தசதாலத்தினுலாவது, அல்லது அதம தசதாலத்தினுலாவது செய்யலாம் என்றும் காமிகாகமம் கூறுகிறது, அதாவது

द्रव्यै श्शिलादिभिः कार्यः पूर्ववल्लक्षणान्वितः ।
मध्येन दशतालेन दशतालाधमेनवा ॥ — कामिकागमम्

சண்டீசருக்குக் காலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை காலங்களில் பூஜை செய்யவேண்டும் என்று காரணுகமம் கூறுகிறது. ஆனுல் எல்லாப் பூஜைகளிலும் முடிவிலே தான் சண்டேசனுக்கு உபசாரம் பூஜை முதலியன செய்யவேண்டும்.

चण्डेशायेति संकल्प्य यच्छिवाय निवेदितम् ।
नैवेद्यं चैव पूजान्ते चण्डेशस्यार्चकोत्तमः ॥
गत्वा तदालयं शुद्धतोयगन्ध स्रगादिभिः ।
संपूज्य शिव निर्माल्यमपि पश्चान्निवेदयेत् ॥ —कामिकागमम्

சிவனுக்கு நிவேதனம் செய்த நைவேத்யத்தை அர்ச்சகன் சண்டேச்வரனுடைய ஆலயத்திற்குச் சென்று சுத்த ஜலத்தினுல் அபிஷேகம் செய்து சந்தனம், புஷ்பம் சாத்தி சிவநிர்மால் யத்தை நிவேதனம் செய்யவேண்டும் என்று காமிகாகமத்தினுல் அறியப்படுகிறது. இவ்வாறு காரணுகமமும்

देवस्यतु नैवेद्यं माल्यं चैव प्रदापयेत् ।

சிவனுக்குச் செய்த நைவேத்தியத்தையும் சிவனுக்குச் சாத்திய மாலையையும் சண்டேசனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்று கூறுகிறது. சேக்கிழாரும்

அண்டர்பிரானுந் தொண்டர் தமக்கதிபனுக்கியனைத்துநா
முண்டகலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோமென்றங்கவர் பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றைமாலை வாங்கிச் சூட்டினுர்.

(பெரிய புராணம்,)

திருவாய் மலர்ந்தருளி என்று, ஆகவே ஒவ்வொரு கால பூஜையின் முடிவில் சண்டீசருக்குச் சிவநிர்மால்ய புஷ்பங் களைச் சாத்தி சிவநிவேதனத்தை நிவேதனம் செய்து தீபாரதனை செய்யவேண்டும், என விளங்குகிறது.

நைமித்திகமான கும்பாபிஷேகத்திலும் முடிவில் சண்ட யாகம் செய்யவேண்டும்,

कुम्भाद्भिश्च विशेषेण स्नापयेत्परमेश्वरम् ।

எனத்தொடங்கி

चण्डेशं पूजयित्वातु निर्माल्यं तु निवेदयेत् । — कारणागमम्

அதாவது யாககும்ப ஜலத்தினுல் பரமேச்வரனுக்கு அபிஷேகம் செய்து முடிவில் சண்டேச்வரனைப் பூஜித்து நிர்மால்யத்தை நிவேதனம் செய்யவேண்டும் என்று காரணு கமம் கூறுகிறது,

மகோத்ஸவங்களிலும், சூர்ணோத்ஸவம் தீர்த்தம் யாக கும்பாபிஷேகம் அவரோஹணம் லோகபால விஸர்ஜனம் சக்தியுத்ஸவம் முதலியன செய்து முடிவில் சண்டிகேச

உத்ஸவமும் ஆசாரிய உத்ஸவமும் செய்துமுடிக்கவேண்டும் என்று சிவாகமங்களாலறியப்படுகிறது

மஹோத்ஸவத்தில் மண்டபத்தில் தீபாராதனை செய்யும் காலத்திலும் சோமாஸ்கந்தமூர்த்திக்கு தீபாராதனை செய்த பிறகு சண்டீசனுக்குத் தீபாராதனை செய்யவேண்டும், சந்திர சேகரர் சோமாஸ்கந்தர் முதலிய சிவவடிவங்கள் சதாசிவ தத்துத்தினின்றும் தோன்றியவைகள், சண்டீசர் ஈச்வர தத்துவத்திலுள்ள மூர்த்தி. ஆதலால் தத்துவக்கிரமத்தாலும் சண்டீசருக்கு உபசாரம் சிவனுக்குச் செய்தபிறகு செய்வது சிவாகம சம்மதமாகும்.

சிவாலய தரிசனம் செய்பவர்களும் தரிசன முடிவில் சண்டீசரை தரிசித்து சிவ தரிசன பலனைத்தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டு செல்லவேண்டும் என்பது சாத்திரங்களில் கூறப்பட்ட முறை.

ஆன்மார்த்த பூஜையிலும் முடிவில் சண்டீசரை அர்ச்சித்து சிவநிர்மால்யம் சாத்தி வழிபடவேண்டுமென்று பூஜாவிதி கூறுகிறது.

नीलकण्ठपदांबोज परिस्फुरितमानस ।
शिवपूजाफलं देहि चण्डिकेश नमोस्तुते ॥ (சிவபூஜா விதி)

கறைக்கண்டனுடைய பாதகமலங்களில் சுற்றுகிற மனசையுடையவரான சண்டீசரே உன் பொருட்டு வணக்கம் (எனக்கு) சிவபூஜையின் பலத்தைக் கொடு என்று வேண்டிக்கொள்ள வேண்டும். சண்டீசரைத் தரிசனம் செய்யாவிடில் சிவதரிசன பலன் கிடையாது. சண்டீச பூஜை செய்யாவிடில் சிவ பூஜா பலன் கிடையாது என்றும் மற்றும் க்ஷாமம் உண்டாகும் என்றும் அதற்குப் பிராயச்சித்தஹோமம் செய்யவேண்டும் என்றும் காரணாகமம் பிராயச்சித்தவிதி படலத்தில் கூறுகிறது.

ஆதலால் சண்டீசாராதனை மிக முக்கியம். ஆனால் அதைப் பூஜையின் முடிவில் தரிசனத்தின் கடைசியில் தீபாராதனையின் முடிவில் செய்யவேண்டும் என்பது சிவாகம சித்தாந்தம்.

# வாழும் வழி

திரு. K. மருதப்பிள்ளை அவர்கள்,

குற்றாலம்.

சத்தியமாயிரு ; தர்மம் செய்.

1. வீட்டுத்தேவதையின் அர்ச்சனை, பிள்ளைகள் வித்தியாப் பியாசம் நிலச்சாகுபடி, பயிர் செய்தல், தவிர வேளைக்குச் சரியான போஜனம் இவைகளை மாத்திரம் சகாலத்தில் நடத்தி வரவேண்டும். எவ்வளவு பொருள் செலவானாலும், எவ்வளவு சிரமம் நேர்ந்தபோதிலும் இவற்றைச் செய்யாமல் வேறு காரியங் களுக்கு மனத்தைச் செல்லவிடக்கூடாது.

2. கணக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ளாதவன் சம்சாரி அல்ல. தலைவன் உதயம் முதல் செய்த வேலைகள், குடும்பத்துச் சாமான்கள், ரொக்கம் முதலியவைகளெல்லாம் ஞாபகப்படுத்தி எழுதவேண்டும். அந்தந்தக்ஷணத்தில் எழுது வதைக்காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை.

3. துணிவகையராவில் விசேஷ திரவியத்தைச் செலவிட லாகாது. குறைந்த விலையில் துணி வாங்கிச் சுத்தமாய் வைத் துக்கொள்ளவேண்டும்.

4. எஜமானன் அவசரம் இல்லாமல் சாதக பாதகங்களை நன்றாக யோசித்துப் புத்திசாலிகளைக் கலந்து வேலைகள் செய்ய வேண்டும்.

5. வீட்டுக்காரியங்களையும் வீட்டு எஜமானத்வத்தையும் வீட்டுப் பெரியவர்களே பார்க்கவேணுமென்றதில்லை. சனங்கள் மோசத்தில் அகப்படாமலும், கடன் வாங்காமலும், வீட்டுசனங் களைச் சங்கடப்படுத்தாமலும் பட்சபாதமில்லாமலும், யாவற் றையும் நிர்வகிக்க யார் அருகரோ அவரே நிர்வகிக்கவேணும். மேற்கண்டபடி நியமப்படுத்திச் சக்தியில்லாமல் வந்த காலங் களில் எல்லாம் மாறுதல் செய்துவரவேண்டும். வீட்டுச்சனங்கள் வேலைகளில் நிகரில்லாமல் எஜமானர் இருக்கிறாரல்லவா என்று சோம்பலாயிருந்தால், எஜமானன் எவ்வளவு புத்திசாலியா யிருந்தாலும் வறுமை மிகுந்து எல்லோரும் துன்பத்திற்கு ஆளாகநேரும்.

6. குழந்தைகளின் முகக்குறிப்பு நித்திரை மூச்சு மலப்ர வர்த்தி முதலிய நிலைமைகளைத் தெரிந்துகொண்டு நோய் வரும் என்று தெரிந்தால் ஆகாரத்தினாலும் சாமான்ய ஔடதத்தினாலும் சரிப்படுத்தவேண்டும்.

7. கல்யாணங்களில் நூறுருபாய் செலவுசெய்யவேண்டும். காயத்ரி மந்திரம் வெகு முக்கிய மந்திரம். ஆதலால் ப்ரம்ஹ உபதேச காலத்தில் விசேஷ அன்னதானம் செய்யவேண்டும் என்பது பெரியோருடைய கொள்கை. இதுவே க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. ஆகையால் இதற்கு நூற்றிருபத்தைந்து ரூபாய் செலவு செய்யலாம். குடும்பி கல்யாணத்திற்கு ஐம்பது ரூபாய். அசுப காரியங்களுக்கு ஐம்பது ரூபாய். பண்டிகை புண்யதினங்களில் நான்கு ரூபாய். இந்தப்படி சீமான்கள் செலவு செய்யலாம். ஏழைகள் இதைவிடக் குறைவாய்ச் செலவுசெய்ய வேண்டுமேயல்லாமல் டம்பத்திற்கு ஆளாகக்கூடாது.

8. வேலையற்றவர்களையும் வீண் காலம் போக்குவோர்களையும் வீட்டில் வரவிடலாகாது. பந்துக்களாயினும் சிநேகிதனாயினும் வீட்டுக்கு வந்து வெறும் அரட்டையில் காலம் போக்கி வீட்டுக்காரர் காரியங்களுக்குத் தடையும் தொந்தரையும் செய்வதற்கு இடம் தரக்கூடாது. தவிர, தன் வேலையைக் கெடுத்துக் கொள்வதைப் பார்க்கிலும் மடமை வேறில்லை. யாரும் வந்த வேலையை முடித்துக்கொண்டு உடனே செல்வதுதான் உசிதம். முடிந்தால் பிறர் காரியங்களுக்குத் தானும் சகாயமாய் இருக்க வேண்டும்.

9. துஷ்டநடத்தை உள்ளவர்களுக்குப் பயந்து இனாம் கொடுப்பதை முன்னிட்டு எல்லோரும் அதேபத்ததியில் நடத்தும்படி நேருகிறது. துஷ்டநடத்தை உள்ளவன் எவ்வளவு தனிகனாய் இருந்தபோதிலும் எல்லோரும் உபேக்ஷை செய்தால் தானாகவே படிமானத்திற்கு வருவான்.

10. வீட்டுச் சனங்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான ஆகாரம், உடுப்புக்கள், ஆபரணங்கள் கொடுத்து இரட்சிக்க வேண்டும். தவறு செய்தவர்களை நிர்த்தாட்சண்யமாய்த் தண்டித்துப் பட்சபாதமின்றிக்காப்பாற்றவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் பற்றி எரிந்த வீடு அணைந்தமாதிரி ஆகும். குடும்ப ஜனங்கள் அகாரணமாய் இன்னொருவர் வீடுகளுக்குப் போவதையும், மற்றவர்கள் நம்வீட்டிற்கு வருவதையும் நிறுத்தவேண்டும்.

(தொடரும்)

# திரு. G. வரதராஜப் பிள்ளை அவர்களுக்கு

அளித்த

# பாராட்டுரை

காரகாத்தார் குலக்கண்ணே வருக ! கார்காத்தார் சங்க வித்தின் வித்தே வருக !! திருக்குறள் வேளாம் செம்மலே வருக !!!

பொன்கொழிக்கும் வளவயல்சூழ் திருச்சி மாவட்ட லால்குடியாம் பொறப்பதியில் குரு நமச்சிவாயதேவரும் அவர்க்கமைந்த பத்தினியாம் ருக்மணி அம்மையாரும் செய்த தவப்பேற்றின் பயனாய்ப் பிறந்து வளர்ந்து பயின்று ஓங்கி வரும் வள்ளலே வருக வருக !

அன்பே உருவாய் அமைந்து நற்புகழ்கொள் இன்பமே வேளே இனிது வாழ்க.

காந்தியடிகளின் கைகண்டபயன்தரும் தொண்டே தொண்டு என்று தூய்மையும் வாய்மையுமாகப் பல ஆண்டுகள் பல்லாயிரம் பணிகளைப் பண்புடன் இயற்றி விளங்கினீர்கள். தங்கள்பால் அமைந்துள்ள செந்தமிழ் தேர்ச்சியையும் திருக்குறளின் ஆராய்ச்சியையும் சமயத் தொண்டு பலவற்றையும் கண்டு கேட்டு உற்று உணர்ந்த நம் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இன்னவருக்கு இது தகும் என்று திருவுளம் கொண்டு, தகும் தகும் என்று தாரணியோர் பாராட்ட தங்கட்குத் "திருக்குறள் வேள்" என்ற பட்டத்தைக் கங்கைகொண்ட சோளேச்சுரத்தில் சூட்டினார்கள். அங்கு அந்தக் காட்சியையும் மாட்சியையும் கண்டு களித்து பூரித்துப் பேரானந்தபெருநிலை எய்தினோம். அன்று இராஜேந்திரன் வெற்றிக்கு அடையாளமாய்த் திகழ்ந்த ஏரியும் கோயிலும் கொண்ட ஊரல்லவா அக்கங்கைகொண்டசோழபுரம்! தங்கள் அருமைத் திருமகனுக்கு இராஜேந்திரன் என்ற பெயர் சூட்டப்பேற்றிருப்பதை இதுபோது நினைவுபடுத்துகின்றோம்.

---

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் லால்குடி உயர்திருவாளர். G. வரதராஜப்பிள்ளை அவர்களுக்குத் "திருக்குறள் வேள்" என்று பட்டம் சூட்டியமை குறித்து அவர்களுக்கு மாயூரம் கார்காத்தார் சங்கத்தாரால் 28—2—60 இல் அளித்த பாராட்டுரை.

பட்டம் பல பெற்றாலும் ஞானசாரியன் திருவுள்ளத்தில் எழுந்த பெருங்கருணைத் திறத்தாலே எழுந்த பட்டமாகுமா மற்ற பட்டங்கள்? ஞானத்தின் திருவுருவாய் நான்மறையும் தனிப் பொருளாய் கயிலாயத்தின் மற்றொரு கடவுளாய் விளங்கும் நம் குருமகாசந்நிதானம் அவர்களால் " திருக்குறள் வேள் " என்ற பட்டத்தைத் பெற்றதை எண்ணி உள்ளம் தித்திக்க உடல் சிலிர்க்க இறும்பூறு எய்துகின்றோம்.

சிவப்பணியும் தவப்பணியும் செம்மையும் பெற்றோய்!
நவ நவமாம் புதுப்பணிகள் நன்மையுறப் பெற்றோய்!

உம் வாழ்க்கையை எண்ணும் பொழுது கார் நடக்கும்படி நடக்கும் காராளர் தம்முடைய ஏர் நடக்குமேனில் புகழ் சால், இயல், இசை, நாடகம் நடக்கும்; பார் நடக்கும்; சீர் நடக்கும். பசி நடக்கமாட்டாதோ என்று நம் குலப் பெருமையைக் குறித்து கம்பர்பெருமான் கூறியிருப்பதை நினைத்து நினைத்து நெஞ்சம் நெக்குருகுகின்றோம். இவ்வாக்கிற்கு எடுத்துக்காட்டாய் வழி காட்டியாய் இலக்கியமாய் விளங்கிவரும் தங்களைப் பலபட பாராட்டி சீராட்டி இன்னும் பற்பல பட்டமும் பாங்குடன் பெற்று பல்லாண்டு பயனுடன் வாழ்ந்து வருக என்று எல்லாம்வல்ல இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

---


குமரகுருபரன் ஆண்டு சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்,

# திருவள்ளுவரும் சித்தாந்தமும்

**திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் M. A.**

தனி அலுவலர், சென்னை அரசாங்க ஆட்சிமொழித்துறை, சென்னை.

திருக்குறளின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் சைவசித்தாந்தக்கொள்கைகள் போதிந்து இருக்கின்றன. அதனை ஆராய்ந்து பார்ப்போம்.

ஆண்டவன் ஒருவனே என்பதனைக் குறிக்க னகர ஈற்றால் கூறுகிறார். ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், அந்தணன், எண்குணத்தான், எனப் பத்துப் பாட்டிலும் இறைவனைக் குறிக்கும்போது ஒருமை ஈற்றில் அதுவும் உயர்திணை ஆண்பால் ஈற்றில் முடித்துள்ளார். உயிர்களைக் குறிக்கும்போது பன்மை ஈற்றால் பத்து இடத்தில் கூறுகிறார். அவை முறையே தொழாஅர், நீடுவாழ்வார், சேர்ந்தார், புரிந்தார், நெறிநின்றார், நீடுவாழ்வார், தாள்சேர்ந்தார், நீந்துவர் நீந்தார், சேராதார் என்பனவாம். இதனால் ஆண்டவன் ஒருவனே என்பதும், உயிர்கள் பல என்பதும் பெறப்படுகின்றன.

> " உண்மை யறிவின்பவுரு ஒன்றிரண்டு மூன்றானும்
> ஒண்மைச் செயல்நான்கில் தேர். "

முதல் மூன்று குறளில் உண்மை, அறிவு, இன்பவுரு ஆகிய மூன்றனையும் கூறுகிறார். ஆதிபகவன் என்பதால் உண்மையும், வாலறிவன் என்பதால் அறிவும், மலர்மிசை ஏகினான் என்பதால் ஆண்டவனின் இன்பவுருவமும் பெறப்படுகின்றன. அதன் பின்னர் நான்காவது குறளில் ஆண்டவன் வேண்டுதல் வேண்டாமையிலான் என்பது ஆண்டவனுடைய தன்னலங் கருதாப் பேரருள் செயலைக் குறிக்கின்றது. வேண்டுதல் வேண்டாத தன்மை அருள் தன்மையாகும்.

> " மூவடியால் மூவுயிராம் மூவாத்தாள் நான்கேதிர்வால்
> சேவடிக்காம் நானெறியாம் தேர். "

மாணடி, இலானடி, இறைவனடி என மூன்றிடத்தில் ஆண்டவனுடைய திருவடிகள் கூறப்பெற்றிருக்கின்றன. மூவடியும் மும்மலத்தை உணர்த்தும் குறிப்பாகும். ஆண்டவனை அடையும்

உயிர்களின் நிலை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்ட மூன்று அடிகள் வருகின்றன. அவை முறையே ஒருமலத்தார், இருமலத்தார், மும்மலத்தார் ஆகிய மூவருமாவர்.

" விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே. ' (அப்பர்)

ஆணவமலம் மட்டும் உள்ள ஒருமலத்தார்க்கு விருப்பு வெறுப்பு இல்லை. மணியினிடத்துள்ள ஒளி கடைந்தமாத்திரத்தில் வெளிப்படுவதுபோல ஆண்டவன் உண்ணின்று ( அறிவுக்கறிவாய் ) தன்மையில் உணர்த்த மெய்யுணர்வு தோன்றும். இது மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் என்பதால் பேறப்பட்டது. ஆணவம் கன்மம் ஆகிய இருமலம் உடையார்க்கு விருப்பு வெறுப்பு உண்டு. இவர்களுக்கு மெய்யுணர்வு பாலில் வெண்ணெய் இழுத்துக் கடைய தோன்றுவதுபோல் ஆண்டவன் அருளுருவாய் வந்து முன்னிலையில் தோன்ற மெய்யுணர்வு தோன்றும். இது வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார் என்பதால் பேறப்பட்டது.

" தாள் " என நான்கு இடங்களில் குறித்துள்ளது முயன்று அடையவேண்டியதாதலின் தாள் எனப்பட்டது. (தாள்-முயற்சி) நான்கு தாள்களும் சீலம், நோன்பு, சேறிவு, அறிவு ( சரியை, கிரியை யோகம், ஞானம் ) ஆகிய நான்கு நேறிகளையும் குறிப்பனவாம். ' கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை " என்பதிலிருக்கும் தாள் சீலத்தையும் (சரியை), " அறவாழி அந்தணன்தாள் என்னும்தாள் நோன்பையும் ('கிரியை ) ; உவமையில்லாதான்தாள் " என்பது சேறிவையும் ( யோகம் ) ; நற்றாள் என்பது அறிவையும் ( ஞானம் ) காட்டுகின்றன. இதனால் ஆண்டவனை அடைய அவனருளால் கைக்கோண்டோழுகும் நான்கு நற்றவ நேறிகளும் கூறப்பட்டன.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலமுடைய மும்மலத்தார்க்கு விருப்பு, வேறுப்போடு மயக்கமும் உண்டு. இவர்கட்கு மெய்யுணர்வு விறகில் தீ வலிந்து இழுத்துக் கடைய தோன்றுவதுபோல், ஆண்டவன் அருளால் ஆசிரியத் திருக்கோலங் கோண்டு வந்து படர்க்கையில் உணர்த்தத் தோன்றும். இது இறைவனடி என்பதால் பேறப்படும்.

முதற் குறள் மிகவும் பொருந்திய ஒப்பினல் கடவுளது உண்மையை அம்மை அப்பராகத் தெள்ளத்தெளிய அறிவுறுத்து கின்றது. இரண்டாவது, மூன்ருவது குறள்களும் கடவுளது உண்மையோடியைந்து, உரைக்கப்படுவனவாய அறிவின்பங் களைக் கூறுகின்றன. உண்மை அறிவின்பங்களைச் சத்து, சித்து, ஆனந்தம் எனவும், சச்சிதானந்தம் எனவுங் கூறுவர். இம் முத்திறப் பண்பும் ஒருங்கு வாய்ந்த முழுமுதற் கடவுள் விருப்பு, வெறுப்பிலாப் பெரும் பொருள். பேரருள் வாய்ந்தவன். அவ்வுண்மையை நான்காவது திருக்குறளில் நாட்டியுள்ளார். எனவே ஒன்று முதல் நான்கு திருக்குறள்களும் கடவுள் பண்பும் செய்யும் அருட்செயலும் கூறுகின்றன. அதனுல் முதற் குறளின் வகையே ஏனைய மூன்று குறள்களும் ஆகும். அதனுல் முதற் குறள் கடவுள் உண்மையைக் குறிப்பதாகக் கூறுதல் அமையும்.

ஒன்று முதல் நான்கு வரையும் கடவுள் உண்மையும், பண்பும், நிலைக்களமும் கூறப்படுவனவாக வைத்துக்கொண் டால் ஐந்தாவது குறள் கடவுளுக்கும், உயிர்களுக்கும் இடையே காணப்படும் மலமாகிய திரையாகும். அது " இருள்சேர் இரு வினை " என்றதன்கண் இருக்கும் இருள் என்றதனுல் பெறப்படும். இது ஐந்தாவது திருக்குறளாக அமைந்திருப்பதால், ஆருவது திருக்குறள் திரையால் மறைக்கப்பட்டு ஆண்டவனுக்குப் புறமாய் நிற்கின்ற ஆருயிர்களைக் குறிப்பது பொருத்தமாகும். அவ்வுண்மை ' நெறிநின்ருர் ' என்னுஞ் சொல்லால் பெறப்படும். எனவே, திருக்கோயிலில் காணப்படும் திருவுருவமும், அதனை அடுத்துக் காணப்படும் திரையும், அதனை அடுத்துக் காணப்படும் ஆனேருகிய நந்தியும் முப்பொருள் உண்மையை இந்த முறையில் செப்புகின்ற ஓவிய மொழியாகும்.

அதனைக் காணப்படும் ஏழாவது திருக்குறளால் "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்னும் தமிழாகம மந்திரப்படி ஒப்பில்லாதவனுங் கடவுள், ஒருவனே என்பது பெறப்படும். அவ்வுண்மை " மைப்படிந்த கண்ணுளும் தானும் " என்னும் அப்பர்பெருமான் அருளிய செப்பரும் செந்தமிழ்த் திருமறையால் உணரலாம்: அக் கடவுள் உயிர்களின் இருவினைக்கீடாகப் பிறப்பினை நல்கி உய்வித்தற்பொருட்டு முறை செய்தருளுகின் றனன். அங்ஙனம் முறைசெய்யுங்கால் மறத்தண்ணளியால்

ஒறுத்தலைப் புரிகின்றனன். அறத்தண்ணளியால் அருள் புரிகின்றனன். இவ்விரண்டினாலும் அவன் அறவாழியந்தணன் என அழைக்கப்படுகின்றனன், ஒரோவழி அறவாழி என்னுஞ்சொல்லினாலேயே ஒறுத்தலாகியதிறலும் அருளிப்பாடும் அமைத்துக் கொள்ளின், அந்தண்மையால் திருவடிப்பேறு நல்குகின்றனன் எனக் கொள்க.

அத்தகைய கடவுள் உயிர்கட்கும், மூவர் முதலாகிய ஏனைத் தேவர்கட்கும் உள்ள அறிவு, ஆட்சி, இன்பு என்று சொல்லப் படுகின்ற முக்குணங்களும் கடந்து மிக்க அருட்குணங்களாகிய எண்குணங்கள் இயல்பாக உடையவன் ஆவான். அவனது திருவடியினைத்திருவருளால் இடையறாதுநினைப்பவர் பிறப்பற்று, சிறப்புற்று, மீளாவடிமையாய்ப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வர். நினையாதவர் பிறப்பறாது இருவினைக்கீடாக மீண்டும், மீண்டும் பிறப்பர். பிறவிப் பெருங்கடலை நீந்தாது அதனுள் அழுந்துவர்.

முதலதிகாரத்தின்கண் மூன்று திருப்பாட்டுக்களால் இறை, தளை, உயிர் ( பதி, பாசம், பசு ) என்பன குறிக்கப்பட்டுள்ளன. அவை முறையே முதற் பாட்டும், ஐந்தாவது பாட்டும், ஆறாவது பாட்டும் ஆகும். மற்றும் மூன்று பாட்டுக்களால் திருவடி குறிக்கப்பட்டுள்ளது. அவை முறையே மூன்றாவது, நான்காவது, பத்தாவது திருப்பாட்டுமாகும். இம் மூன்றினாலும் முறையே ஒருமலமும், இருமலமும், மும்மலமும் உடைய எண்ணில்லாத உயிரினங்களைக் குறிப்பனவாகும். நான்கு திருப்பாட்டுக்களில் தாள் என்னுஞ் சொல் காணப்படுகின்றது. அவை நான்கு நெறிகளைக் குறிப்பனவாகும். நான்கு திருப்பாட்டுக்களும் இரண்டு, ஏழு, எட்டு ஒன்பது ஆம்.

ஐந்தாவது திருக்குறளிலும், பத்தாவது திருக்குறளிலும் இறை என்னுஞ் சொல் காணப்படுகிறது. இது முறையே உலகத்தோடு முதல்வன் இயைந்து, உலகத்தை நடத்துவதும், அவ்வுயிர்கட்கு செவ்வி வாய்ந்த நிலைமையை, அவைகளைத் தன் திருவடிகட்கு ஆளாக்கும் முறையில், உலகினின்றும் கடத்துவதுமாகிய இருவேறு செயல்களையும், இறைவன் அவ்வுயிர்களோடு நீக்கமற இயைந்துநின்று இயக்குகின்றான் என்னும் உண்மை புலப்படுத்துவதாகும்.

கடிதம்

ஆடக மதுரை அரசே போற்றி,

அண்ணல் ஆலவாய் நண்ணினுன்றனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே.

சிவதர்ம பாஸ்கர
ம. க. சுந்தரேச பட்டர்,
முதல் நிர்வாக ஸ்தானிகம்,
ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில்

38, 48 வடக்காவணிமூலவீதி
மதுரை.
17—2—1960.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களுக்கு,

இவ்விடம் இராமேஸ்வரத்திலிருந்து சுகமே வந்து சேர்ந்தோம். அவ்விடம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருள்மிகு திருவுள்ளத்தின் வழி உபசரிப்புகள் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றன. இறை வழிபாடுகள் எங்கும் காணு முறையில் நடைபெற்றதைக் காண மிக மகிழ்ச்சி ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக்கழகத்தினர் நடத்திய வழிபாட்டுக்கூட்டம் கயிலாயத்து உச்சியிலுள்ள கண்ணுதற் பெருமானின் திருவருட் பெருக்கிலே திளைக்கவைத்தது. குருவருளும், திருவருளும் ஒருங்கே பெற இவ்வாய்ப்பு அன்பர்க்கு சித்தித்தது நற்றவப் பயனே. திருவாளர்கள் திருஞானம் பிள்ளை. இராமலிங்கம் பிள்ளை, வரதராஜ பிள்ளை, முதலிய நல்லன்பர் கூட்டத்தின் குழுவிலே இருந்தபோது மணிவாசகர் வேண்டிய அடியார் நடுவுள் இருக்கும் அருள் பெற்று ஆனந்தம் மிக உற்றேன். அன்று திருஞானசம்பந்தப் பெருமான் பதினுயிரம் அடியவர் கூட்டத்தோடு தல யாத்திரை செய்த காட்சியைச் சேக்கிழார் புராண வாயிலாக் கண்டோம். இன்று குருஞானசம்பந்தப் பெருமான் அடியார் திருக்கூட்டத்தோடு தல யாத்திரை செய்த அருட் காட்சியை நேரே காணப் பெற்று மதிசூடிதன் அருள்பெறு நிலையுற்ருேம்.

சங்கும் முத்தும் பிற கடல் விளை செல்வங்களையும் திரைக்கையால் எடுத்து வீசும் அலைவாயிலில் நின்று அருட் கோடை வழங்கிய திருக்கை வழக்கக்காட்சி புலவர் போற்றிப் புகழ் பாடத்தக்க புண்ணியக் காட்சி. கயிலை சந்நிதானத்தாலன்றி வேறு எங்கும் காணு புனித மிகு காட்சி. அன்பர் நலம் கருதும் அருள் உள்ளம் கொண்ட மகா சந்நிதானத்திற்கு

ஆட்பட்டு அன்பு செய்தாலன்றி வேறு என்ன கைம்மாறு இயற்றக்கூடும் அன்பரால்? கயிலை மகாசந்நிதானத்தில் கங்கையும், பிற அபிஷேகத்திரவியங்களும் கொண்டு இராமநாதப் பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டிச் செய்த காட்சி பேரின்ப வெள்ளத்துள் அன்பர் கூட்டத்தைத் திளைக்கச்செய்தது.

வல்லவாறெல்லாம் நல்ல பணிகளை எவரும் செய்ய முடியாத நிலையில் இயற்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆலவாய் மேவிய அம்மையப்பரின் திருப்புகழின் பெருக்கைப் போல் பெருகிய ஆயுளும், நோயற்ற வாழ்வும், எண்ணிய எண்ணியாங்கு இயற்றும் திறமும்கொண்டு அருளாட்சி புரிய சந்நிதானத்தின் மாத ஜன்ம நக்ஷத்திர தினத்தில் அங்கயற் கண்ணி தன்னோடு அமர்ந்த சோக்கலிங்கப் பெருமானுக்கு அருச்சனை செய்து இத்துடன் விபூதி குங்குமப் பிரசாதம் அனுப்பியிருக்கிறது,

ம. க. சுந்தரேச பட்டர்.

எஸ். நடராஜ நாடார், பி. ஏ , பி, எல்.,

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் சுவாமி அவர்கள் மேலாம் திருவடிகளுக்கு மிகுந்த வணக்கத்துடன் எழுதிக்கொண்டது. திருவருள் துணைகொண்டும், தங்களது அன்புசால் ஆசி கொண்டும், எங்களது தல வழிபாட்டு யாத்திரையை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு 14—2—60 மாலை 4 மணி அளவில் நலமுடன் மதுரை வந்து சேர்ந்தோம்.

தங்களுடைய அன்பும், ஆதரவும் உதவியும் காரணமாகவே குறுகிய கால அளவிலேயே எங்களது யாத்திரையை நூற்றுக்கு நூறு வெற்றிகரமாக முடிக்க முடிந்தது. அதற்கு நாங்கள் எங்களது பணிவார்ந்த, உளங்கனிந்த நன்றியை எவ்வளவு தெரிவித்தாலும் போதாது. எனவே, 'யாம் இதற்கிலனோர் கைம்மாறே மற்றறியோம் செய்யும் வகை' என்ற திருவாசக அடிகளை நினைவு கூர்ந்து வணக்கம் தெரிவித்துக் கொள்கிறோம். யாத்திரையில் கலந்துகொண்ட அத்தனை சகோதரிகளும், சகோதரர்களும் சிரந்தாழ்த்தி தங்களது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

தருமை ஆதீனத்தைச் சேர்ந்த ஆலயங்களிலெல்லாம், எங்களுக்கு விசேட வரவேற்பு அளித்து எங்களுக்குக் கண் குளிர, உள்ளங் குளிர தரிசனம் செய்யும் வகையில் வேண்டிய வசதியும், ஒத்தாசையும் செய்தார்கள். அருள் விருந்துடன், சுவை மிக்க பிரசாதங்களும், காபியும் பலகாரங்களும் கொடுத்தும் உபசரித்தார்கள். பிறகோவில்களிலும் குறித்த காலத்தில் சென்று வழிபடுவதற்கு வழிகாட்டியும், ஆட்களை அனுப்பி முன்னேற்பாடு செய்தும் வேண்டிய உதவி நல்கி ஞர்கள். அவர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக

தாங்கள் அன்புடன் அளித்த தென்கயிலை, வடகயிலைத் திருப்பதிகங்கள், மகா கயிலாய யாத்திரை முதலிய நூல்கள் யாவரும் போற்றி மகிழ்ந்து படிக்கத் தக்கன. அவற்றிற்கு எங்கள் தனிப்பெரும் நன்றியை அளிக்கும் கடப்பாடுடையோம்.

தாயினும் சாலப்பரிந்து தாங்கள் அளித்த அறுசுவை உணவு, 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்னுற்றும் கொல்லோ உலகு' என்ற குறளுக்குப் பொருள் சொல்லிற்று.

சிவ அன்பர் தேசிகர் அவர்கள் எங்கள் பிரயாணத் திட்டத்தில் சில மாறுதல்கள் செய்து அதன்படி ஆங்காங்கே வழிபடவும், தங்கவும், உணவு கொள்ளவும் ஏற்பாடுகள் அமைத்துத் தந்தது மிகவும் உபயோககரமாக இருந்தது. அதன்படி 11 தேதி இரவு சிதம்பரத்தில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு திருவெண்காடு வந்து தங்கினேம். ஆகையால் மறுநாள் முக்குளத்தில் நீராடவும், காவிரிபூம்பட்டினத்தில் காவிரி சங்கமத்தில் நீராடவும் திட்டத்திலுள்ளபடி, திருச் சாய்க்காடு, பல்லவனீச்சரம் திருக்கடவூர் முதலிய எல்லாக் கோவில்களையும் ஒன்று விடாமல் வழிபட்டதுடன் காரைக்காலில் இறவாத அன்பு வேண்டிப்பெற்ற காரைக் காலம்மையாரையும் வணங்கி வாழ்த்திக்கொண்டு திருநள்ளாறு, திருமருகல், திருச்செங்காட்டாங்குடி, திருப்புகலூர் சேவித்து திருவாரூர்சென்று தியாகேசரையும் இரவிலே வழிபடவும்ஏதுவாக இருந்தது. தேசிகர் அவர்களுக்கு எங்கள் தனிப்பெரும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேம்.

நாங்கள் வழிபட்ட ஆலயங்களில் தருமை ஆதீனத்தைச் சேர்ந்த ஆலயங்கள் அனைத்தும் மிக்க தூய்மையாகவும், அழகாகவும் அலங்காரமாகவும் விளங்கின. பிற கோவில்களும்

உயர்திரு. உத்தண்டராம பிள்ளை அவர்களது நன்முயற்சியால் சீராக செப்பனிடப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டும் அழகாக வைக்கப்பட்டிருக்கிறது. சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்கு ஒரு நல்ல அறிகுறி என்றே நம்புகிறேம். வைத்தீஸ்வரன்கோவில் ஸ்ரீமத் தம்பிரான்சுவாமிகள் அவர்களுக்கும், நண்பர் திரு. முத்து. சு. மாணிக்கவவாசகம் அவர்களுக்கும், திருநள்ளாறு ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

கடிதம் முடியும் தருவாயில் தாங்கள் இராமேஸ்வரத்திலிருந்து அனுப்பிய விபூதிப் பிரசாதம் கிடைத்தது. மிகுந்த மகிழ்ச்சியுடன் அணிந்துகோண்டோம். தங்கள் அருளாசிக்கு மீண்டும் எங்கள் நன்றி.

இப்படிக்கு
தங்கள் அருளாசியை விரும்பும்,
(ஒப்பம்.) எஸ். நடராசன்
புஷ்பம் நடராசன்

---

## EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Sivalokathiagarajaswami Devasthanam
Achalpuram.

இன்று 28—2—60 ஞாயிறு உடையார்குடி-மன்னுர்குடி வார வழிபாட்டுக் குழுவினர் இத்திருத்தலத் திருக்கோயிலில் வழிபாடு செய்யும் சிவபுண்ணியம் பெற்றுப் பிறவிப் பயன் பெற்றனர். திருக்கோயில் அர்ச்சகப்பெருந்தகையார் மிகச் சிறந்தமுறையில் திருவுருவங்களுக்கு அலங்காரம் செய்து அன்பு ஆர்வம் பெருகவும் இறைவனது திருக்கோலக் காட்சியைக் காணச்செய்தனர். இவ்வாலயத்தின் தூய்மைநிலை பெரிதும் உளம் கவர்ந்தது. இங்குப் பணியாற்றும் நிர்வாகக் குழுவினரும், தேவாலய ஊழியர்களும் இத்தகைய நற்றெண்டாற்றுவதுகண்டு பெரிதும் உளம் மகிழ்கின்றனர். திரு. T. S. வைத்தியநாதன் அவர்களும் திரு. சித்தையா முதலியார் அவர்களும் புரிந்த நல்லுதவியை எஞ்ஞான்றும் போற்றுகின்றனர், இறைவன் திருவருள் நிறைவதாக.

சா. கணபதி
ஆவண துணைப்பதிவாளர், வாரவழிபாட்டுக் கழகத் தலைவர்,
உடையார்குடி - மன்னுர்குடி. 28—2—60.

# முன்னியது முடிக்கும் முருகன்

செஞ்சொற்கொண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்,

தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

முருகு அழகு. முருகின் வடிவாய் நிற்கும் பெருமான் முருகன், குன்றுதோருடும் குமரன். கருதிய பொருளையெல்லாம் கைகூட்டுவிக்கும் கண்கண்ட தெய்வம். முருகு உள்ள இடமெல்லாம் முருகனின் அருளாட்சி நிலவும் இடம். அன்பும் அருளும் உள்ளோர் நெஞ்சில் முருகன் முன்னியது முடிப் பொனுக விளங்குகின்ருன். "மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்" என்பது அருணகிரிநாதர் திருவாக்கு. குழந்தைத் தெய்வமாக நிற்கும் இப்பெருமான் 'சேயோன்' எனப்பட்டான்; சிவந்த திருமேனியன், பிள்ளைத் திருமேனியன் என இருபொருள்படும் இச்சேயோன், தொல்காப்பியனர் வாக்கிலே "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொடரிற் களிநடம் புரிகின்ருன். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத செல்வன், கோவலன் அழகைக் கூறவந்த இளங்கோ அடிகள் பெண்கள் கூட்டம் கோவலனை இவன் அழகில் செவ்வேள் என்று ஏத்தியதாகப் பாடுகிருர்: "கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கி" என்பது சேரன் தம்பி செந்தமிழ். திருவாரூரில் பரவையார் புற்றிடங்கொண்டபெருமான் திருமுன் சுந்தரரது சுந்தரத் திருமேனியைக் காண்கின்ருர். அவரது சிந்தனையில் முதலிற்ருேன்றியவன் முருகனே. "முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனே" என்பது சேக்கிழார் செழுந்தமிழ்.

கோசலத்து வளம் கூறப்புகும் கம்பர் அந்நாட்டு ஆடவர் பற்றி அறிவிக்கின்ருர். கலை நலம் தெரிந்த கற்ருேராக அன்னாரைக் கூறுகின்ருர். அறிவும் அழகும் நிரம்பிய அவ்வாடவரைக் குறிக்குங்கால் அவர் கருத்திற் குதித்தோடி வந்தவன் முருகனே. "கந்தனை அனையவர் கலைதெரி கழகம்" என்பது கம்பர் கவியமுதம்.

முருகன் அருள் பெற்ற அடியார்கள் எந்த நேரத்திலும் அவன் அருளைப் பெறுகின்ருர்கள். அருணகிரிநாதர்,

" நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்தநேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான் " (கந்தரலங்காரம் - 20)

என்று கூறியிருப்பதே அதற்காதாரம்.

ஆறுபடை வீடுகளில் அமர்ந்து அருள் வழங்கும் முருகன் அருளை நன்ருக வாரி முகந்துண்ட அருணகிரிநாதர் தம் அருளனுபவத்தைத் திருப்புகழாக - கந்தரனுபூதியாக - கந்த ரலங்காரமாக அருளியுள்ளார்.

" சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே " (அநுபூதி - 12)

என்பது அவர்கள் உபதேச விளக்கம். அந்த அநுபவத்தைச் சிதம்பர சுவாமிகள் தாமும் பெறவேண்டுமென்று விழைந்து போரூர்த்திருமுருகன் திருமுன்பு விண்ணப்பிக்கின்ருர்கள்.

" சும்மா இருவேனநீ சொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென்று அன்றுரைத்த—எம்மான்
அருணகிரிநாதன் அநுபவம் நாயேற்குக்
கருணை பொழி போரூரா காட்டு "

என்பதே அவர்கள் விண்ணப்பம். தம் உபதேச அநுபவமாக அருணகிரிநாதர் மேலும் உரைப்பது :-

" அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா " (அநுபூதி - 20)

அப்படி முருகன் உணர்த்திய மெய்ப்பொருளால் அமரும் பதி, கேள், அகம் என்னும் மயக்கங்கள் மாய்ந்தன என்ற உண்மையை,

" அமரும் பதிகேள் அகமா மெனுமிப்
பிமரம் கெடமெய்ப்பொருள் பேசியவா " (அநுபூதி - 8)

என்றும் அருளி வெளிப்படுத்தியிருக்கிருர்கள். இவ்வாறு பெற்ற மெய்ப்பொருள் உணர்ச்சியால் மரணமிலாப் பெருவாழ்வு வந்துறும். அந்நிலையைக் கந்தரனுபூதியே,

" கூகாவென வென் கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா " (அநுபூதி - 11)

என்று விளக்கியிருப்பது அனைவரும் உணர்தற்குரிய ஒன்றும். அப் பேரருள் வழக்கைப் பேசி அறியமுடியாது ; அதனை,

" ஆசா நிக ளம் துக ளாயின பின்
பேசா அநு பூதி பிறந்ததுவே " (அநுபூதி - 43)

என்றும் விளக்கியருளினர்கள்.

இவ்வாறு முருகன் திருவருள் அநுபவம் பேறவேண்டுமானல் இடைவிடாத சிந்தனை வேண்டும். விரதங்கள் வழுவாது ஒழுகவேண்டும். முருகனுக்குரிய விரதங்களாக உள்ளவை :- வேள்ளி விரதம், கார்த்திகை விரதம், சஷ்டி விரதம் என்பனவாகும். இவற்றுட் கார்த்திகை விரதத்தை மேற்கோண்டு முருகன் திருவருளைப் பேற்று இன்ப வாழ்வு எய்தி வருவோர் பலராவர். கார்த்திகைத் திங்கள் கார்த்திகை முதலாகக் கார்த்திகை நட்சத்திரங்கள் தோறும் 12 ஆண்டு மேற்கோள்ளத் தக்க விரதம் என்பர்.

திருக்கார்த்திகைத் திருநாள் நந்தமிழ் நாட்டின் பழம்பெருந் திருவிழாவாகும். தமிழ் மக்கள் அன்று இல்லங்கள்தோறும் விளக்குகள் ஏற்றி வழிபடுவர். அகநானூற்றில் ஔவையார், நக்கீரனர், பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆகிய புலவர்கள் இவ்விழாவைக் குறிப்பிட்டிருக்கிறர்கள்.

" கலிகோள் ஆயம் மலிபுதோகு பேடுத்த
அஞ்சுடர் நேடுங்கோடி போறபத்தோன்றி " (அகம் 11)

" மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில்லம்ம " (அகம் 141)

" பேருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலைஇல மலர்ந்த இலவமோடு " (அகம் 185)

" அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போல " (நற்றிணை 202)

என்றெல்லாம் சங்கநூற் பகுதிகளில் இவ்விழாப்பற்றிய கருத்துக்கள் உள்ளனவாதலை அறியவேண்டும். அன்றியும்,

" கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே "

என்ற களவழிநாற்பது 17 ஆம் பாடலின் வரிக் குறிப்பையும் இங்கு உணரலாம். இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து பார்க்கும்போது, இத் திருநாளின் தொன்மையை நன்குணரலாம். இத்திருநாட்குரிய தமிழ் முருகன் நம் தென்னகத்தில் ஆறுபடை வீடுகளை இடமாகக்கொண்டு அருள் வழங்குகின்றான்.

அவ்வாறுபடை வீடுகளோடு ஒத்த பழஞ்சிறப்பும், திருவருள் வீறும் உடையதாய் விளங்கும் முருகத்தலம் புள்ளிருக்குவேளூர் ஆகும். புள்ளிருக்குவேளூர் புராணப்பெயர். 'வைத்தீசுவரன் கோயில்' வழங்கும் பெயராகும். இங்கு முருகப்பெருமான் செல்வமுத்துக்குமாரசுவாமி என்ற திருநாமத்தோடு வீற்றிருக்கின்றார். குமரகுருபர அடிகளுடைய முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ் என்னும் பாமாலை சூடிய பைந்தமிழ் முருகன் இப்பெருமான். முருகப்பெருமான் வீரமகேந்திரபுரியை நோக்கி எழுந்தருளியபோது இத்தலத்தில் எழுந்தருளியுள்ள தையல் நாயகித்தாயிடம் வேல்வாங்கினன் என்பது வரலாறு. இம் முருகப்பெருமானுக்கு அர்த்தயாமத்தில் நேத்திரப்பிடிச்சந்தனம் சார்த்துவது வழக்கம். அதனை விதிப்படி உண்பவர்கட்குக் குன்மம் முதலிய பிறவி நோய்கள் நீங்கும்.

திங்கள்தோறும் வரும் கார்த்திகைத் திருநாளன்று இம் முருகப்பெருமானுக்கு மகாபிஷேகம் நிகழும். நாடெங்கணும் உள்ள நல்லன்பர் பலரும் வந்து ஏத்திப் போற்றி நினைத்தன பெறுவர். நாடோறும் முருகனுக்கு வழிபாடு நடந்த பின்னரே தான் வைத்தியநாதர் வழிபாடு பெறுவார். அவ்வளவுக்கு இந்தத் தலத்தில் முருகப்பெருமான் திருக்காட்சிச் சிறப்புடையவனாய்த் திகழ்கின்றான். " செல்வ முத்துக்குமாரசுவாமி " என்ற அடைமொழிச் சிறப்பு இப்பெருமானுக்கே இருத்தல் அறிந்துணரத் தக்கது.

மனக்கவலை தீர்க்கும் மாமருந்து முருகன். அமைதியும் இன்பமும் வழங்கும் அருள் அருவி முருகன். இன்பமும் எழிலும் வழங்கும் இன் கனி முருகன். கருத்தில் உயர்ச்சியும், கனிவும் வழங்கும் அருளமுதம் முருகன். முருகன் திருவருள் முன்னியது முடிக்கும்; முட்டறுத்து நல்வழி காட்டி நல்லின்பம் கூட்டும். அஃது அருளாளர்களின் அநுபவம். அவ்வநுபவச் செந்நெறிவழிநின்று முருகன் திருவடிபற்றுவதே நமக்குக் குறிக்கோள்.

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே."

(அநுபூதி 51)

---

மதிப்புரை

## காஞ்சி காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

இயற்றியவர்: காஞ்சி. திரு. இரா. குப்புசாமி B. A., அவர்கள் மன்னார்குடி, பதிப்பித்தோர்: திருமதி, இராஜேஸ்வரி அம்மை. பக்கங்கள் 108, விலை ரூ. 1—00,

இந்நூல் காஞ்சி காமாட்சியம்மையைப் பத்துப் பருவங்களில் குழந்தையாக அமைத்து இயற்றப்பெற்றது, பிள்ளைத் தமிழ் என்பது மக்களில் சிறந்தாரையும், தெய்வங்களையும் குழந்தை யாகக் கருதிச் செய்யப்பெறும் பிரபந்தமாகும். இந்நூல் ஒவ்வொரு பருவத்திற்கு பத்துப்பத்துப் பாடல்களாக பத்துப் பருவத்திலும் நூறு பாடல்களைக்கொண்டு விளங்குகிறது. ஒவ்வொரு பாடலும் தமிழ்ச்சுவையைப் பக்திவசத்தோடு ஊட்டவல்ல உயிர்க் கவிதைகளாக உள்ளன. பழமைக் கவிதைகளுக்குள்ள கருத் தோட்டம், நல்ல உவமைகள் கற்பனைகள் ஆகிய வண்ணங்கள் இவை இந்நூற்கு ஒரு தனிச் சிறப்பு, 'பிள்ளைத் தமிழுக்கு அம்புலி புலி' என்பதற்கேற்ப இப்பருவம் அமைந்துள்ளது. இந் நூலாசிரியர், மற்றவர் முரணுகச் சொல்லும் இடர்ப்பாடு நீங்கத் தாமே உணர வகுத்துள்ளார். காமாட்சியைக் குழந்தையாகப் பார்க்க இந்நூல் ஒரு கண்ணாடி. இந்நூல் விற்பனைத் தொகை ஒரு நூலகத்திற்கு உதவி நிதியாகச் சேர்தல் குறிப்பிடத்தக்கது. சமய உலகும் தமிழுலகும் ஏற்றுப் போற்றிப் பயனுறுக.

—வி. சா. குருசாமி தேசிகர்



1 தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அக்னிதீர்த்தத்தில் திருமஞ்சனமாகி ஆலய வழிபாட்டுக்கு எழுந்தருளல்

2 தனுஷ்கோடியில் (சமுத்திரஸ்நானம்) அன்பர்களுடன் திருமஞ்ஞனம்ஆதல்





1 தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பிலாலந்துறை ஆலயவழிபாட்டை முடித்துத் திரும்ப எழுந்தருளல்

2 திருமாந்துறையில் வழிபாடு முடித்து வலம்வருதல்



# ஜ்யோதிர் லிங்கம்

சிரோமணி, பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரி,

தருமபுரம்.

இப்போழுது நடைபேறுவது சுவேதவராஹகல்பம் எனப் படும். இதற்கு முந்திய கல்பத்தில் நாராயணனுடைய நாபிகம லத்திலிருந்து பிர்மதேவன் நேடுநாள் தபம் செய்தார். தபத்தி னுடைய முடிவில் நான் யார்? எங்கு இருக்கிறேன்? என்னை உண்டுபண்ணியது யார்? என்ற பல வினாக்கள் அவருடைய மனத்தில் தோன்றின. அவர் நாற்புறமும் ஜலம் சூழ்ந்திருப்பதை யும், தான் ஒரு தாமரைப் பூவில் இருப்பதையும் கண்டு அந்தத் தாமரைத் தண்டு வழியே இறங்கிவந்தார். கார்முகில் வண்ண னை திருமாலைக் கண்டு நீர் யார்? என்று வினவினார். திருமால் நான் உன்னைப் படைத்தவன்; உலகத்தைக் காப்பவன் என்றார். உம்மைப் படைத்தது யார் எனப் பிரமன வினவினார். நானே எல்லாம்வல்ல கடவுள்; நான் யாவற்றிற்கும் காரணமேயன்றி என்னை ஒருவரும் படைத்தவர் இல்லை என்று மால் விடையளித் தார். என்னைப்போல் நீவிரும் ஒருவரே. ஆதலின் உம்மைப் படைத்தவர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்று பிர்மன் கூறினார். இவ்விதமாகப் பேச்சு மிகுந்து இருவருக்கும் போர் உண்டாயிற்று.

கடுமையான போர் நடக்கும் போழுது இருவருக்கும் நடுவில் ஒரு ஒளிப்பிழம்பு (ஜ்யோதிர் மயமான லிங்கம்) தோன்றிற்று. அதைக் கண்டு மயங்கிய இருவரும், தம்முள் நடந்த போரை நிறுத்தி, அந்த லிங்கத்தின் அடி முடிகளைக்காண விழைந்தனர். பிர்மன் ஹம்ஸரூபத்துடன் முடிப்பக்கம் சென்றார். திருமால் வராஹ உருவம் கோண்டு அடிப்பக்கம் சென்றார். ஆயிரம் ஆண்டுகள் பாதாளத்தில் சுற்றித்திரிந்தார். அதுமுதற்கோண்டு சுவேதவராஹகல்பம் உண்டாயிற்று. இந்த வரலாற்றை ஆதார மாகக்கோண்ட திருவுருவமே சிவாலயங்களில், கர்ப்பக்கிருஹத் தின் பின்புறமுள்ள கோஷ்டத்தில் லிங்கோத்பவ மூர்த்தியாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்விதமாக அயனுக்கும் மாலுக்கும் நடுவில் தோன்றிய ஒளிமயமான லிங்கம் ஜ்யோதிர்லிங்கம் என்று சிவமஹாபுராணம் கூறுகிறது.

உலகம் யாவும் லிங்கத்துள் அடங்கியுள்ளன. உலகமே ஒரு லிங்கமாய் உள்ளது. யாவையும் லிங்கமாக இருத்தலின் லிங்கங்கள் இத்துணை என்பதைக் கணக்கிட்டுக் கூறமுடியாது. நர்மதா நதிக்கரையில் பல லிங்கங்களும் தீர்த்தங்களும் உள் ளன பாரதநாட்டின் தென்கோடியிலிருந்து இமயமலை முடிய பல க்ஷேத்திரங்கள் உள்ளன. அவற்றில் அளவிடமுடியாத மகிமையுடையன சில. சௌராஷ்ட்ரதேசத்தில் சோமநாத லிங்கம், ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ச்சுனலிங்கம், உஜ்ஜயினியில் மகாகாளலிங்கம், அமலேச்வரரான ஓங்காரேச்வரலிங்கம், ஹிமயமலையில் கேதாரலிங்கம், டாகினியில் (டேக்கான்) பீமசங்கரலிங்கம், காசியில் விசுவேசலிங்கம், கோதாவரி (கௌதமீ) நதிக்கரையில் திரியம்பகலிங்கம், சிதாபுரத்தில் (பரலீ) வைத்யநாதலிங்கம், தாருகாவனத்தில் நாகேசலிங்கம், சேதுவில் (இராமேச்வரத்தில்) இராமேசலிங்கம், சிவாலயத்தில் குஸ்மேசலிங்கம் என்ற இப்பன்னிரண்டு லிங்கங்களும் ஜ்யோதிர் லிங்கங்கள் எனப்படும். இந்த லிங்கங்களின் பெயரை விடியற் காலையில் எழுந்தவுடன் நினைத்தால், பக்தியுடன் துதித்தால், அறிந்தும் அறியாமலும் சரீரம், வாக்கு, மனம் இவற்றால் செய் யப்பட்ட சகல பாபங்களும் நீங்கும். செய்வதற்கரிய காரியங் களும் விரைவில் சித்தியடையும். இந்த லிங்கங்களைப் பூசித் தவர், நினைத்தவர் யாவரும் நற்கதியடைவர் என்றும் அப் புராணம் கூறுகிறது.

### ஸோமநாதலிங்கம் :

அச்வினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களும் தக்ஷ னுடைய பெண்கள். அவர்களைத் தக்ஷன் சந்திரனுக்கு மணம் செய்வித்து எல்லாப் பெண்களிடமும் ஒரேவிதமான அன்பு கொண்டு வாழ்வாயாக என்று சந்திரனுக்குக் கட்டளையிட்டார். ஆனால் மணம் செய்துகொண்டுவந்த சந்திரன் ரோஹிணியி னுடைய அழகு குணம் இவைகளால் அதிகமாகக் கவரப்பட்ட வனாய் அவளிடம் மற்ற மனைவிகளைக்காட்டிலும் அதிகமான அன்புடன் வாழ்க்கையை நடத்தினான். அதைக்கண்டு மனம் வருந்திய மற்ற நக்ஷத்திரங்கள் தந்தையிடம் சென்று சந்திரனின் செய்கைகளைப் பற்றி முறையிட்டனர். தக்ஷனும் சந்திரனை அழைத்து ஒரு மனைவியிடம் மட்டும் அதிக அன்பு பாராட்டாமல் யாவரையும் ஒரேவிதமாக நடத்துமாறு மறுபடியும் கட்டளை யிட்டார். ஆனால் சந்திரன் முன்போலவே நடப்பதை மறுபடியும்

பேண்களால் அறிந்த தக்ஷன் சந்திரனை "க்ஷயமடைவாயாக" எனச் சபித்தார். சாபத்தினால் க்ஷயமடைய ஆரம்பித்த சந்திரன் வருந்தித் தேவர்களிடம் தனக்கு ஏற்பட்ட சாபத்தைக் கூறி அதை நீக்குமாறு வேண்டினான். தேவர்கள் பிர்மதேவனிடம் சென்று சந்திரனைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டினர். பிர்மதேவன் "முன்பு ஒருதடவை சந்திரன் தன்னுடைய குருவின் மனைவியினிடத்தில் தகாதமுறையில் நடந்துகொண்டான். இப்பொழுதும் அக்னிசாக்ஷியாக மணந்த மனைவிகளிடத்தில் முறைதவறி நடக்கிறான். அவன் தீயசெயல்களுக்கு இவ்வகையான துன்பத்தை அநுபவித்தே தீரவேண்டும்" என்றார். சந்திரன் அழிந்தால் பயிர்கள் வளரா. அதனால் உலகத்திற்கு நாசமுண்டாகும். உலகம் நன்குவாழ அவனைக் காப்பது தங்கள் கடமை என தேவர்கள் மேலும் வேண்டினர். தக்ஷனுடைய சாபத்தை நீக்க எனக்கு வலிமையில்லை. புண்ணியக்ஷேத்திரமான பிரபாஸம் சென்று மிருத்யுஞ்ஜய மந்திரத்தினால் சிவபெருமானை ஆராதனை செய்யட்டும். சிவபெருமான் அவனுடைய க்ஷயரோகத்தை நீக்குவார் என்று பிர்மதேவன் அருளினான்.

சந்திரனும் பிரபாஸக்ஷேத்திரமடைந்து அங்குத் தேவர்களால் உண்டுபண்ணப்பட்ட புண்ணிய தீர்த்தத்தில் நீராடி மிருத்யுஞ்ஜய மந்திரத்தைப் பத்துக்கோடி ஜபித்தான். அதனால் சிவபெருமான் மிகவும் சந்தோஷமடைந்து பிரத்யக்ஷமானார். சந்திரனே! உன்னுடைய சாபத்தை முற்றிலும் நீக்க இயலாது. உன்னிடம் எஞ்சியுள்ள ஒரு கலையை நான் என்னுடைய முடியில் அணிகிறேன். இன்றுமுதல் உனக்கு ஒருபக்ஷம் வரை குறைவும், ஒருபக்ஷம் வரை வளர்ச்சியும் மாறி மாறி உண்டாகும் என்று அருளினார். பின்பு தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இரங்கி சந்திரன் பூசித்த அவ்விடத்தில் சந்திரனுடைய பெயரால் "ஸோமநாதம்" என்ற திருநாமம் தாங்கி பார்வதி, நந்தி மற்றுமுள்ள பிரமத கணங்களுடன் வீற்றிருந்து அருள்வழங்குகிறார். அங்குத்தேவர்கள்உண்டுபண்ணிய தீர்த்தம் சோமகுண்டம் என்ற பெயருடன் விளங்குகிறது. இந்த ஸோமநாதலிங்கத்திற்கு மஹாநதிதீரத்திலுள்ள அந்தகேசலிங்கம் உபலிங்கமாகும்.

ஜ்யோதிர்லிங்கங்களுள் ஒன்றாகிய இந்த ஸோமநாதலிங்கம் ஸௌராஷ்டிர தேசத்திலுள்ளது. இது கத்தியவாருக்குத் தெற்கே வேராவளபந்தருக்குக் கிழக்கே நான்குமைல் தூரத்திலுள்ளது.

(தொடரும்)

# திருக்கோளிலியில் நெல் மகோற்சவம்

இத்தலம் தஞ்சை ஜில்லா நாகப்பட்டினம் தாலூகாவில் திருவாரூரிலிருந்து அறந்தாங்கி செல்லும் இருப்புப் பாதையில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஏழுகல் தூரத்திலும், நாகப்பட்டினமிருந்து திருத்துறைப் பூண்டிக்குச் செல்லும் கற்பாதையில் கீழையூரிலிருந்து மூன்று கல் தூரத்திலும் விளங்குகிறது. ஆதியில் பிரமதேவன் சிருட்டித்தொழிலைப் பெறவேண்டிப் பூசித்தமையால் பிரம தபோவனம் எனப்பெறும். முசுகுந்தன், தேவேந்திரன் பாற் பெற்றுக்கொடுவந்து பிரதிட்டித்த விடங்கத்தலம் ஏழில் இது அவனிவிடங்கத் தலம். கதகாரண்யம் (தேற்றாமர வனம்). புஷ்ப வனம், தென் கயிலை என்னும் பெயர்கள் இத்தலத்து உலாவில் வழங்கப்பெறுகின்றன. நவக்கிரகங்கள் முதலியோர்க் கும் உளதாய குற்றத்தை நீக்கி அருள்புரிந்தமையால் கோளிலி என்னும் பெயர்பெற்றது. தற்போது திருக்குவளை என்று மருவி வழங்குகிறது. திருஞானசம்பந்தர் முதலிய மூவர்களாலும் பாடப் பெற்றது. வன்றொண்டர் குண்டையூர்க்கிழார்தந்த நெல்மலையைத் திருவாரூர் பரவைமாளிகைக்கு எடுத்துச் செல்ல ஆள்வேண்டிப் பாடி அவ்வாறு பூதங்களால் நெல்மலையைக் கொண்டுபோய்ச் சேர்த்த அற்புதம் நிகழ்ந்ததான பெருமை வாய்ந்தது இத்தலம். ஆலயத்திற்கு வடபுறம் மிக்க அணிமையில் புனிதமும் புண்ணியமும் வாய்ந்த முத்திநதியாகிய சந்திரநதி கிழக்கு நோக்கிச் செல்கிறது. சந்நிதிமுன் அருகில் பிரமதீர்த்த மென்னும் மணி கர்ணிகை உள்ளது. தென்புறம் இந்திரதீர்த்தமும் மேல்புறம் அகத்தியர் தீர்த்தமும் உள்ளது. தென்மேற்கு மூலையில் சிவலோக விநாயகர் கற்றளியினருகில் விநாயக தீர்த்தமொன்று உள்ளது. ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் சத்தி தீர்த்தமென்று ஒரு கூவலுளது. மிகப்புனிதமானது. அதுதான் அபிஷேக முதலியவற்றிற்குப் பயன்படுகிறது. தல விருக்ஷம் தேற்றாமரம். மாசிமாதத்தில் மகநாளில் சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குப் பூதங்கள் நெல் அட்டிச்செல்லும் திருவிழா மூன்றுநாட்களும் பக்த உற்சவமாக நடைபெறு கின்றது. மார்கழித் திங்களில் ஆருத்ரா தரிசனமும். தியாக ராஜப் பெருமான் வசந்த மண்டபத்தில் காட்சி அளித்தலும் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் சோழமன்னனுக்கு வேண்டி

ஞாயிற்றுக்கிழமைநான்கிலும் தீர்த்தம் பிர்மதீர்த்தத்தில் அளிக்கப் பெறுகிறது. ஞானசம்பந்தப்பெருமான் திருக்கைச்சினம் முதலிய தலங்களை வழிபட்டு இங்கு எழுந்தருளினர். அப்போது பெருமான் கோள்களின் தீமையைப் போக்கி ஆட்கொள்வார் என்ற குறிப்புப்பட 'கோளாய நீக்குமவன்' 'கோளரவ நீக்குமவன்' என்று குறிப்பிடுகிருர்கள். பஞ்சவரில் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துவந்தான் என்பது பாண்டவருக்கும் கோளிலிக்கும் உள்ள தொடர்பை விளக்குவதாகும். பழந்தக்கராகப் பண் அமைந்த பதிகம் ஒன்று இத்தலத்திற்குண்டு. திருநாவுக்கரசு சுவாமிகளருளிய திருக்குறுந்தொகை இரண்டு இத்தலத்திற்கு உண்டு. இவர்களும் கோளிலிப் பெருமானைத் தொழ 'அல்லல் நீங்கும் வினைநாசமாம் அல்லல் இல்லை' என்றே அறிவிக்கிருர்கள். இவருடைய குறுந்தொகையில் நோய்கள் 64 வகை என்ற தொகை குறிப்பிடப்படுகிறது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் :- பங்குனி உத்திரத் திருநாளில் சுந்தரர் மாளிகைக்கனுப்ப நெல் இல்லாமையால் வருந்திய குண்டையூர்க் கிழாருக்கு இறைவனருளால் நெல்மலை கிடைத்தது. நெல்மலையைச் சுந்தரர்பெருமான் கோளிலியப்பரை வேண்டி, திருவாரூருக்குக் கொணர்வித்தார். அந்த வேண்டுதலை விளக்கும் பகுதிகள் 'சில நெல்லுப்பெற்றேன் ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணி' என்பதாம்.

இக் கோயிலைப்பற்றிய கல்வெட்டுக்கள் 19 உள்ளன. அவற்றுள் சடாவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன், இராஜராஜன், இராஜாதிராஜன், இராஜேந்திரன் முதலிய சோழ பாண்டிய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் உணர்த்தப்படுகின்றன.

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான 27 திருக்கோயில்களுள் ஒன்ருய் விளங்கிவரும் இத்திருக்கோயிலைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் புரந்துவருகின்ருர்கள். இத்திருக்கோயிலில் நெல் மகோற்சவ விழா விகாரி ஆண்டு மாசித்திங்கள் 26ம் நாள் (9—3—60) புதன்கிழமை முதல் தொடங்கி (13—3—60) ஞாயிற்றுக்கிழமை முடிய மிக்க சிறப்போடு நடைபெறுகிறது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் அறிஞர்களால் நிகழ்த்தப்பெறும்.

# செய்திகள்

## தருமைக் குருமணியின் யாத்திரைக் குறிப்புக்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் அருட்பீடமேற்ற பிறகு இந்தப் பாரதபூமியில் உள்ள பல பெருந்தலங்களுக்கும் யாத்திரை சென்று வழிபட்டு வந்து அந்த அனுபவக் குறிப்புக்களை அவ்வப்போதும் ஞானசம்பந்தம் வாயிலாகவும், புத்தக வெளியீடாகவும் மக்களுக்கு அளித்து வருகிறார்கள். தாம் பெற்ற இன்ப அனுபவங்களை மக்களும் பெற்று உய்தல்வேண்டும் என்ற பெருங்கருணை வழக்கமாக அதனைப் பலரும் விரும்பிப் போற்றி அதன் வழிச் சென்று பலன் பெருக்கிக்கொள்கிறார்கள்.

அதுபோல 1960 ம் ஆண்டில் தொடங்கி நடைபெறும் யாத்திரைத் தொகுப்பாக இது எழுதப்படுகிறது. இவ்வாண்டு பிறந்த பெருநாளிலேயே திருச்சி மக்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளுபதேசங்களைப் பெற்று மகிழ்ந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தை வரவேற்றுபசரித்து அவர்களுடன் சென்று வழிபட்டு இன்பம் பெருக்கிக்கொண்டார்கள். 1—1—1960ல் திருச்சியில் நடைபெற்ற வரவேற்புச் சிறப்புக்களை அன்பர்கள் படித்தறிந்திருக்கிறார்கள். சென்று தரிசித்து வந்த தல வழிபாட்டுக் குறிப்புக்கள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

அது முதல் இதுவரை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருப்பைஞ்ஞீலி, திருப்பாச்சிலாச்சிராமம் திருவன்பிலாலந்துறை, தவத்துறை, திருமாந்துறை, திருப்பாற்றுறை, திருஆனைக்கா, திருச்சி ஸ்ரீ தாயானசெல்வர் திருக்கோவில், திருவிராமேச்சுரம், சிதம்பரம், முதலிய பல பெருந்தலங்களைத் தரிசனம் செய்து வந்திருக்கிறார்கள். இவற்றில் திருவானைக்காவிலிருந்து பின்சொல்லப்படும் தலங்கள் பல முறையும் தரிசனம் செய்யப்பெற்றன. ஆகையால் அக்குறிப்புக்கள் இங்கே தரப்படவில்லை. அது ஒழிந்த மற்றப் பாடல் பெற்ற தலங்களைத் தரிசனம் செய்து வந்த குறிப்புக்கள் மட்டிலும் தரப்படுகின்றன.

1—1—1960 காலை ஸ்ரீ தாயானசெல்வர் திருக்கோவில் வழிபாடும் பிறகு மாலையில் அன்பர்கள் சூழ திருவரங்கத்துத் தரிசனத்துக்கு எழுந்தருளினார்கள். கோவில் அதிகாரிகள் உரிய முறையில் வரவேற்றுத் தரிசனம் செய்து வைத்தார்கள். திருவரங்கநாதர் திருமேனிக்குத் தீங்கு நேர்ந்த பொழுது சென்று கண்டு திருவுளங் கனிந்த ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்தில் அத்திருமேனித் திருப்பணிக்கான செலவுத் தொகையை அளித்துப் புதுப்பிக்கச் செய்த செய்தி அன்பர்கள் அறிவர். ஆகையால் புதுப்பித்து சம்ரோக்ஷணம் ஆனபிறகு திருவரங்கநாதனைத் தரிசித்து வழிபாடுகள் முடித்துக்கொண்டு சமயபுரம் ஸ்ரீ மாரித்தாயை வழிபட எழுந்தருளினார்கள்.

இது திருச்சி - சென்னை பெருஞ்சாலையில் திருச்சியிலிருந்து 5 கல் தொலைவில் வலது புறத்தில் செல்லும் சாலையில் 2 கல் தொலைவில் அமைந்த தலம் திருவரங்கக் கோவிலின் உபகோவிலாக இருப்பது. இருந்தாலும் இதற்கு எனத் தனியான நிர்வாக அதிகாரி இருக்கிறார். வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. இத்தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் பல உண்டு.


அவற்றுள்: ஜனகமகரிஷியின் பத்தினியாக இருந்த அம்மையார் தேவனொருவனைக்கண்டு கருத்தழிந்து நிற்பதைக் கண்ட முனிவர் அவள் உடலைத் தீக்கொள்ளும்படி சபித்தார். அவ்வாறே உண்ணத் தொடங்கிய தீ அம்மையாருடைய தலையிலிருந்து பிடித்து எரிந்து வந்தது. இந்த நிலையில் கண்ட அவருடைய மகன் தன் தந்தையிடம் சென்று மிக உருக்கமாக வருந்தித் தனக்கு ஒரு வரம் கேட்டான். தந்தையும் அளிப்பதாக வாக்குத் தந்தார். தனக்குத் தாய் வேண்டும் என்று கேட்டார். அங்ஙனமே ஆகுக என்று அளித்தார். அம்மையார் மீது பற்றி நின்ற தீ தணிந்தது. ஆனால் தலை எரிந்து சாம்பலாகிவிட்டது. இதனைக்கண்டு வருந்திய மகன் மறுமுறையும் தன் தந்தையைக் கண்டு நடந்த செய்தி சொல்லி தன் தாய்க்கு ஒரு தலை கொடுத்தருள வேண்டுமென்று வேண்டிநின்றான். சிறிது சிந்தித்து திருவருள் விளைவாக நடந்த செய்தியுணர்ந்து அப்பிள்ளையின் முன்னிலையில் எதிர்ப்படும் மனிதத் தலையைக் கொய்து இட்டால் அது பொருந்தி அம்மையார் உயிர்

பேற்று எழுவார் என்று அருளிச் செய்து அகன்றார். அவ்விதமே வெளியே சென்றுபார்த்த அப்பிள்ளையின் எதிரிலே ஒரு பூதப் பேண் எதிர்பட்டாள். உடனே அவள் தலையைக் கோய்து தன் தாய்க்கு இட்டான் தநயன். தாய் உயிர் பேற்றெழுந்தாள் ஒரு அருளுருவாக. பிள்ளைக்கு வேண்டிய வரம் கோடுத்து அருள் வழங்கினள் ஆனல் அப்படியே அவள் உடல்மீது பட்ட தீத் தழும்பு மறையாது நின்றது. இப்போழுதும் அம்மையார் எழுந்தருளி இருந்து அருள் வழங்கி வருகிறாள். பங்குனி மாதத்தில் பேரிய விழா கோண்டாடப்படுகிறது. அவ்விழாவில் 4 நாட்கள் பச்சைப்பட்டினி விழா என்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபேறும். இந்த நாட்களில் அம்மையாருக்கு சமைக்கப்படாத பச்சைக் காயும் கனியும்தான் நைவேதனம். பேருந்திரளாக மக்கள் இங்கு வந்துகூடி வழிபட்டுப் பேரும் பலன் அடைந்து வருகிறார்கள். பேருங் காணிக்கைத் தலம். இங்குக் கிடைக்கும் வருமானத்தில் சேலவு போக எஞ்சியது திருவரங்கநாதருக்குப் பயன் படுத்தப்படுகிறது. அவ்விதமாகப் பேருந்தோகை இக்கோவிலிலிருந்து திருவரங்கத்துக்குப் போவதாகத் தேரிகிறது.

இதுவல்லாது விஜயநகர சாம்ராஜ்யம் சிதைந்து விஜய நகரம் பிடிபட்டவுடன் அந்த நாட்டு மீன்பிடிப்போர் அங்கு எழுந்தருளியிருந்த அம்மையை ஒரு தந்தப் பல்லக்கில் வைத்து எழுந்தருளிக்கோண்டு தேன்திசை நோக்கி வந்த தாகவும் இங்கு வந்ததும் அம்மையார் இங்கேயே தங்கி யிருக்க விரும்பி எழுந்தருளிவிட்டதாகவும் சோல்லப்படுகிறது. அம்மையார் அவ்விதமாக எழுந்தருளிவந்த பல்லக்கு இன்றும் கோவிலில் இருப்பதாகவும் சோல்லப்படுகிறது.

இந்த ஊர் நம் நாட்டுச் சரித்திரத்திலும் இடம் பேற்றது. இங்கு ஆங்கிலேயர் பிரஞ்சுக்காரர் சண்டை ஒன்று 1752 ல் நடைபேற்றிருக்கிறது. அதில் இக்கோவிலில் உட்புகுந்து கோண்ட பிரஞ்சுப் படையை ஆங்கிலேய தளகர்த்தன் கிளைவ் தந்திரமாக அழித்து வேற்றிகண்டான் என்று வரலாறு கூறுகிறது.

ஹோய்சல மன்னர்கள் 13 வது நூற்றாண்டில் சோழ நாடாக இருந்த இப்பகுதியைக் கைப்பற்றி இந்த ஊருக்கு



ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோவில் மேல்தளம்

இராமேஸ்வரத் தல யாத்திரை — லால்குடியில் (திருத்தவத்துறை)



தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருத்தவத்துறை ஆலயவழிபாடு முடித்து உற்சவமண்டபத்தில் வரவேற்பு ஏற்றருளல்

அருகில் கண்ணபுரத்தில் விக்ரபுரம் என்ற பேயரால் நகரமைத்து தலைமையிடமாகக்கொண்டு அதிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த தாகவும் சரித்திரம். சரித்திரச் சின்னங்கள் பலவும் இந்த ஊரிலும் அக் கண்ணபுரத்திலும் கிடைத்துவருகின்றன. இக் கோவிலின் கருப்பக்கிரகம் விஜயரங்கசோக்கநாத நாயக்க ரால் கட்டப்பட்டது என்றும் இன்னும் இதுபோன்ற செய்திகள் பலவும் சொல்லும் கல்வேட்டுக்களும் இங்குண்டு.

## சென்னை சமயப் பிரசார நிலையத்தில்
## வைத்தீசுவரன்கோயில்
## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் (வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) ஒவ் வோருமாதமும் கிருத்திகைக்கு மறுநாள் வேளூர்ப் பெருமான் பிரசாதம் வழங்கிவருவதைப்போல் இம்மாதம் 5—3—60 மாலை 7 மணிக்குத் திருப்புள்ளிருக்குவேளூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்திப் பிரசாதம் வழங்கப்பட்டது. கூட்டத்திற்குச் சென்னை கார்ப்பரேஷன் டிப்டிமேயர் திரு. N. சங்கரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் பேசுகையில் விஞ்ஞானத்தால் பொரு ளைத் தேடலாம்; அருளைத்தேட இயலாது. அமைதி கிடைக்க முடியாது. இவற்றை அடையவேண்டுமானால் மெய்ஞானந்தான் நமக்குத் துணைசெய்யும். ஆண்டவன் அருட்பிரசாதத்தால்தான் இவற்றைப் பெறமுடியும் என்று கூறினார்கள். தேவார இசைமணி களான இந்திராவும், இலக்குமணனும் வேளூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்தினார்கள்.

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். பக்தர்கள் சந்தனக்குழம்புப் பிரசாதமும், விபூதி, குங்குமப் பிரசாதங் களும் பெற்றுச் சென்றனர்.

## திருக்கள்ளில்
## மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம், 6-3-60 ஞாயிறன்று மாலை திருக்கள்ளம்

என்றும், மடவிளாகம் என்றும் வழங்கும் திருக்கள்ளில் என்னும் தலத்தில் சிறப்பாக நடைபெற்றது. சமயப் பிரசாரக் குழுவின ரைத் திருக்கள்ளீசர் திருக்கோயில் தர்மகர்த்தர் திரு. மாணிக்க முதலியார் அவர்களும், ஊர்ப் பொதுமக்களும் வரவேற்று உட னிருந்து வழிபாடு செய்துவைத்து, சமயப் பிரசாரம் நிகழ்த்தவும் உதவிபுரிந்தனர். சுவாமி சந்நிதியில் திருஞானசம்பந்தர் அரு ளிச்செய்த அவ்வூர்த் தேவாரப் பதிகத்தினைத் தேவார இசைமணி, திரு. V. இலக்குமணன் இசையோடு ஓதினர். ஒவ்வொரு சந்நிதி யிலும் நிலைய மாணவிகள் பக்திப் பாடல்களைப் பாடிப் பிரார்த் தனை நிகழ்த்தினர்.

சுவாமி சந்நிதி முன்மண்டபத்தில் சமயப் பிரசாரக் கூட்டம் சைவப்பெரியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிள்ளையவர்கள் தமது தலைமை யுரையில், நமது ஆன்மசக்தியைப் பெருக்கிக்கொள்ள உதவும் நிலையங்களே திருக்கோயில்கள் என்றும், அவற்றுள்ளும் சமயா சாரியர்களால் பாடப் பெற்றவை சாதாரண மக்கள் உள்ளத்தை யும் புனிதப்படுத்தும் தன்மை வாய்ந்தவை என்றும், நூதன வண்டி வசதிகள் இல்லாத அக்காலத்திலேயே நமது நாயன் மார்கள் இம்மாதிரியான தலங்கட்குச் சென்று வழிபட்டு மக்க ளிடையே கடவுள் பக்தியையும் ஒழுக்கத்தையும் நிலைபெறச் செய்தார்கள் என்றும், எல்லா வசதிகளும் உள்ள இக்காலத்தில் கடவுள் வழிபாட்டையும், ஒழுக்கத்தையும் மக்கள் அலட்சியம் செய்து வருகின்றனர் என்றும், இம்மாதிரி நடந்துகொள்வது நமக்கும், பின்வரும் சந்ததியார்க்கும் பெருந்தீங்கு விளைக்கும் என்றும், நாடு நலமுற நல்லவர்கள் தொகை நாளும் பெருக வேண்டும் என்றும், அதற்குக் கடவுள் பக்தியும் வழிபாடும் அவசியம் என்றும் கூறினர்கள்.

பிறகு, திரு. க வச்சிரவேல் முதலியார், இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், புலவர். திரு. முருகவேள், உருக்மினிகுக்கர் உரிமையாளர் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் ஆகியோர் அவ்வூர்த் தேவாரத்தைப்பற்றியும், சமயாசாரியர்கள் செய்துள்ள அருட்செயல்களைப்பற்றியும் பேசினர்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறினர்கள். அவர்கள் பேசுகையில், கள்ளியும் முள்ளியும் நிறைந்திருந்த காரணத்தால் இத்தலம் கள்ளில் என வழங்குகிறது என்றும்,

இதனால் இறைவனின் பேரருட்டிறம் விளங்குகிறது என்றும், நிறைவான நெஞ்சம் படைத்த அடியவர் உள்ளத்தில்தான் இறைவன் வசிக்கிறான் என்று இத்தலத் தேவாரம் குறிப்பிடு கிறது என்றும், குறைவிலாநிறைவாயுள்ள ஆண்டவனைப்போற்றி நிறைநெஞ்சம் பேறுதற்கு இவ்வழிபாடு நமக்குப் பெருந்துணை புரியும் என்றும் குறிப்பிட்டார்கள்.

ஊர்ப்பொதுமக்கட் சார்பிலும், திருக்கோயில் சார்பிலும், தர்மகர்த்தர் மாணிக்க முதலியார் நன்றி தெரிவித்தார். திருக் கோயில் தர்மகர்த்தா அவர்களும், மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார் அவர்களும் வந்திருந்தோர் அனைவர்க்கும் பிரசாதங் களும், சிற்றுண்டியும் வழங்கி உபசரித்தார்கள். திரு. M. A. சுப்பிரமணிய முதலியார் J. P. அவர்கள் தம்மால் வெளி யிடப்பட்ட சார்வரி வருஷ மனோன்மணிப் பஞ்சாங்கத்தைத் தொண்டர்கள் அனைவர்க்கும் அன்பளிப்பாக வழங்கினார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் அடுத்தமாத வழிபாட்டுக் கூட்டம் ஷை கூட்டத்தின் முதலாவது ஆண்டுப் பூர்த்தி விழாவாகக் கொண்டாடப்படும் என்றும், அவ்வழிபாட்டுக் கூட்டம் ஏப்ரல் மாதம் முதல் தமிழ்நாட்டுடன் சேர இருக்கும் திருவாலங் காட்டில் 3—4—60 அன்று காலை முதல் மாலை வரை நடை பெறும் என்றும் கூறி நன்றி தெரிவித்தார்கள். இலக்குமணன் கடவுள் வாழ்த்துப்பாடினார்.

## மகாசிவராத்திரி விழா

25—2—60 மாலை 7 மணிக்கு மகாசிவராத்திரி விழாவும், திருஇராமேசுவரப் பிரசாதம் வழங்கும் விழாவும், திருப்புகழ் மணி திரு. டி. எம். கிருஷ்ணசாமிஐயர் தலைமையில் ஷை பிரசார நிலையத்தில் நடைபெற்றது. திரு. புலவர், முருகவேள் “ மகாசிவராத்திரியும் இராமேசுவரமும் ” என்பதுபற்றிப் பேசி னார்கள். இராமேசுவரத்தேவாரப்பிரார்த்தனையை சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்களும், இலக்குமணன் அவர்களும் நிகழ்த்தினர், எல்லோருக்கும் இராமேசுவரத் தீர்த்தப் பிரசாத மும், விபூதி குங்குமப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

## மாயூரம், தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில், 21—2—60 இல் மாயூரம் குமரக் கட்டளை ஸ்ரீசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், 28—2—60இல் மாயூரம் ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி திருக்கோயில், 6—3—60இல் மாயூரம், வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில் மாயூரம், தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினர் வழிபாடு நிகழ்த்தினர். வழிபாட்டில் வார வழிபாட்டுக் கழக உறுப்பினர்களும் மற்றவர்களும் கலந்துகொண்டனர். வழிபாட்டு முடிவில் அறிஞர்கள் பலர் சொற்பெருக்காற்றினார்கள். வழிபாட்டுக்குழுத் தலைவர் திரு. B. திருஞானம் பிள்ளை, B. A., B. L., அவர்கள் வரவேற்புரையும், செயலர் திரு. K. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்கள் அடுத்த வார வழிபாட்டின் இடத்தைக்கூறி நன்றி நவின்றார்கள்.

சிறப்பாக இவ் வழிபாட்டில் 28—2—60 அன்று திருச்சி "திருக்குறள் வேள்" திரு. G. வரதராஜப் பிள்ளை M. A., அவர்களும், சென்னை அரசாங்க ஆட்சிமொழித்துறை தனி அலுவலர், திரு கீ. இராமலிங்கம் M. A., அவர்களும் தருமை ஆதீனக் கல்லூரி முதல்வரும் பேராசிரியரும், மற்றும், பலரும் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றினார்கள்.

## திருநெல்வேலி ஸ்ரீகுருஞானசம்பந்தர் திருமுறைக்கழகம், தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகம் பன்னிரண்டாவது தமிழ்த் திருநாள்

திருநெல்வேலிச் சந்திப்பில் உள்ள தருமபுரம் மடத்தில் 1960 மார்ச்சு 6ஆம்நாள் தொடங்கி 13ஆம்நாள் முடிய விழா நடைபெறுகிறது. காரைக்குடி திரு. சா. கணேசன் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்தார்கள். 6—3—60 திருவள்ளுவர், 7—3—60 தமிழகச் செல்வங்கள், 8—3—60 காவியம், 9—3—60 பட்டிமண்டபம், 10—3—60 விஞ்ஞானம் என்ற முறையில் திருநாள்கள் கொண்டாடப்பட்டன. அறிஞர்கள் பலர் தலைமை வகித்தும், வாழ்த்தியும், பல தலைப்புக்களில் சொற்பொழிவாற்றியும் திருநாளைச் சிறப்பித்தனர். இரவில் நாடகம், இசையரங்கு முதலியன சிறப்புற நிகழ்ந்தன.

11—3—60 வெள்ளிக்கிழமை திருமுறைத்திருநாளும், 12—3—60 சனிக்கிழமை சைவசித்தாந்தத் திருநாளும், 13—3—60 ஞாயிற்றுக்கிழமை காலை மாலை இருவேளை களிலும் சிற்றிலக்கிய மூன்ருவது மாநாடும் நிகழ இருக்கின்றன. இவைகளில் பல அறிஞர்கள் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றுவார்கள். இரவு நாடகம், வில்லுப்பாட்டு முதலியன நிகழும். 12—3—60 அன்று தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம், வித்துவான் ஒடுக்கம், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கயிலாய பரம்பரையில் திருமூலர் என்ற தலைப்பிலும், க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் B.A., L.T., மெய்கண்டார் என்ற தலைப்பிலும் ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், முதுபெரும் புலவர். திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் உமாபதி சிவம் என்ற தலைப் பிலும் வித்துவான் நவநீதகிருட்டிணன் அவர்கள் குருஞான சம்பந்தர் என்ற தலைப்பிலும் சிவத்திரு. சித்தாந்த சரபம் ஈசான சிவாசாரியசுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்று வார்கள். இரவு புகழேந்திப் புலவர் என்ற நாடகத்தைக் கழகத்தார் நடிப்பர்.

**ஞானசம்பந்தம்** ஆண்டுக் கட்டணம் ரூ. 1 — 50

**[ சந்தாதாரர்களுக்கு ]**

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணி யார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுது வதற்குப் போதுமான தபால் பில்லை அனுப்புதல் வேண்டும்,

முகவரி :— செயலாளர், "ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்.
திருவிடைமருதூர்.

( விகாரிஸு பங்குனி 1உ முதல் 30உ முடிய )

( 14—3—60 முதல் 12—4—60 முடிய )

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$**

அசுவதி 1, 2 பாதங்கள் மிச்ர பலனைத்தரும். இடம் மாறி தொழில் ஓங்கும். அசுவதி 3, 4 பாதமும் பரணி 1 ம் பாதமும் இல்லற சுகத்தையும் வஸ்திராபரணச் சேர்க்கைகளையும் தரும். பரணி 2, 3, 4 பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் சுபமிராது. கவலை காட்டும். வீண் அலைச்சல்களும் மனோவியாகூலமும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$**

ரிஷபராசி 9 பாதங்களும் கஷ்ட பலன்களையும் தந்து சில சாச்வத சுகபோகங்களையும் தரும். கிரயவிக்ரயங்களும் ஏற்படும். அடிக்கடி இடம் மாற்றும். சஞ்சாரமும் ஏற்படும். கவலை அதிகமாகும். திங்கள், புதன் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$**

மிருக சீர்ஷம் 1, 2 பாதமும், திருவாதிரை 1, 2 பாதமும் சுபபலனைத் தரும், இடம் மாறி உத்தியோக லாபம் கிடைக்கும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். ஆரோக்யம் உண்டாகும். நல்வாழ்வு ஏற்படும். திருவாதிரை 3, 4 பாதம் மிச்ரமாக நடக்கும் வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் விவகார வெற்றியையும், சுபசோபனுதி நற்காரியங்களையும் தானதர்ம பலன்களையும் ஆரோக்யத்தையும் தரும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் நற்பலன்களைத் தரும். மாணவர்களுக்கு வித்யாவிருத்தியும், வியாபாரிகளுக்கு அதிக லாபமும்

விவசாயிகளுக்கு சந்தோஷமும், உத்தியோகஸ்தர்களுக்கு மேல் பதவியும், தொழிலாளர்களுக்குத் தொழில் மேன்மையும் ஏற்படச்செய்யும். சந்தோஷகரமாக நடக்கும். விவகாரம் கீர்த்தி ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதங்களும் உத்தியோக உயர்வைத் தரும், நஷ்டமான பொருள் வந்துசேரும். குடும்ப சுகம் ஏற்படும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். தெய்வ பலம் பிரகாசிக்கும். பூரம் 4 பாதங்களும் வரவு செலவு சமமாக இருக்கும், குடும்பத் தொல்லையும், வியாதிபயமும் உண்டுபண்ணும். உத்திரம் முதல் பாதம் வெகுதூரசஞ்சாரத்தைக் கொடுத்துத் தொழிலைக் கொடுக்கும். பூர்வீகமானபொருள்சேதமடையும், வெள்ளி,சனிசுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் புதுமுறையில் தொழில் லாபம் ஏற்படச்செய்யும். செய்யும்காரியங்கள் வெற்றியடையும். சந்தோஷம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். ஹஸ்தம் 4 பாதங்களும் உயர்பதவிகளைத் தரும். எதிர்பாராத தன லாபங்கள் ஏற்படச்செய்யும். கண்களுக்குப் புலப்படாமல் இருந்த மறை பொருளெல்லாம் புலனாகும். சஞ்சார பலனும் கீர்த்தியும் தெய்வ சக்தியும் ஓங்கும், ஆரோக்யம் உண்டாகும். சித்திரை 1, 2 பாதங்கள் கிரயவிக்ரயங்களால் லாபத்தையும், கடன் நிவாரணத்தையும் தந்து சுகவாழ்வு ஏற்படச் செய்யும். சுபமுண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும், நல்லொழுக்கம், கீர்த்தி, தெய்வீகத்தன்மை, மேலோர் பெரியோர், இனவரத்து, காரியசித்தி ஆரோக்யம், குடும்பசுகம் எல்லாவற்றையும் தரும். தெய்வபலத்தால் மனம் நிம்மதி அடையும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4 ம் பாதம் தொழில் ஏற்றத்தைக் கொடுக்கும். உபசரிப்பவர்களிடத்திலும், பெரியோர்களிடத்திலும் அவமதிப்பைத்தரும். அனுஷம் 4 பாதங்களும், கேட்டை 4 பாதங்களும் தன் நிலைமைக்கு மேற்பட்ட சுகபோகங்களையும் ஆடை

ஆபரணச் சேர்க்கைகளேயும் வாகனுதி யோகங்களேயும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

**9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

தனுர்ராசி 9 பாதங்களும் மிகுந்த கவலேகளேத் தந்து உடனே சந்தோஷத்தையும் கொடுக்கும். அதிகச் செலவினங்களும் அலேச்சலும் ஏற்படும். சிறு நஷ்டங்கள் உண்டு பண்ணும். திங்கள் புதன் சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$**

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் மிச்ரமாய் நடக்கும். வீண் அலேச்சல்களும் விரோதமும் ஏற்படச்செய்யும். திருவோணம் 1, 2 பாதங்கள் சமபலனுகும். திருவோணம் 3. 4 பாதங்கள் உத்தியோக உயர்வோடு மேலோர் பெரியோர் அன்பும் நினேத்த காரியமும் சித்திக்கும். அவிட்டம் 1, 2 பாதங்கள் குடும்ப சுகத்தைத்தந்து கிரயவிக்கிரயங்களேயும் லாபங்களேயும் உண்டு பண்ணும். தொழில் ஒங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தனலாபம் தொழில் ஏற்றம் ஏற்படும், பந்துமித்ரர்களுடைய சேர்க்கையையும், கட்டிட வேலேகளேயும் தரும். வெகுதூரத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும். ஆரோக்யம் உண்டாகும். குடும்ப சுகம் ஓங்கும். திங்கள், புதன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.**

மீன ராசி 9 பாதங்களும் தெய்வீகத் தன்மையோடு வெற்றிகளேத் தரும், நூதன தொழில் முறை ஏற்படச் செய்யும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். கிரய விக்ரயம் ஏற்படும். மனம் சந்தோஷமடையும், கடன் ரோகம் முதலியவைகள் நீங்கி மனம் சாந்தி அடையும். தெய்வபலம் பிரகாசிக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதம் இயற்கைகளில் சில மாறுதல் உண்டாகும். தொத்து நோய்களும் காட்டும். விலேவாசிகள் ஏறு முகமாகும். உலகம் சாந்தி சமயத்தில் போய்க்கொண்டிருக்கும். சில தெய்வீகத் தன்மை உடைய பெரியோர்களின் நற்சிந்தனேயால் மற்றெல்லோருக்கும் நல்வாழ்வு உண்டுபண்ணும்.

மதிப்புரை

## வாகீசர் அல்லது மெய்யுணர்தல்

**ஆசிரியர் :- ஸ்ரீமத். சம்பந்தசரணாலயத் தம்பிரான் அவர்கள் (சிவக்கவிமணி. திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B.A,) திருப்புகலூர் ஸ்ரீ அக்னீசுவரசுவாமி தேவஸ்தானம் வெளியீடு. விலை ரூ, 1—50. பக்கங்கள் 174.**

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்குறளுக்கு விளக்கமாக வாழ்ந்த பெருமானாராவர். அப்பெருமானார் வரலாற்றைச் சேக்கிழார் சுவாமிகள் அன்பொழுக, மிக்கதூய்மையுணர்ச்சி பாடல்கள்தோறும் பொங்கி வழியப் பணிவோடு பாடியுள்ளார். சேக்கிழார் செந்தமிழ் முழுதுக்கும் உரைகண்ட சிவக்கவிமணி அவர்கள் இப்போது இந்நூலை உதவியுள்ளார்கள். முன்பு, நீத்தார் பெருமை என்ற திருக்குறளின் விளக்கமாக மாணிக்கவாசக சுவாமிகள் வரலாற்றைத் தந்துதவியிருக்கிறார்கள். இப்போது தம் முதுமைப் பருவத்தில் இச்செந்தமிழ்ப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள். திருக்குறளில் மெய்யுணர்தல் என்றுள்ள அதிகார முழுமையும் நன்கு துருவி ஆராய்ந்து அப்பர் சுவாமிகளோடு அக்குறட் பாக்கள் அனைத்தும் பொருந்துமாற்றைத் தமக்கே உரிய எளிய இனிய தமிழில் புலப்படுத்தியிருக்கிறார்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை I, A. S. அவர்களின் அணிந்துரை முன்னே அழகுசெய்கின்றது. பத்துத் தலைப்புக்களில் வரலாறு ஆராயப்பெறுகின்றது, ''மருணீங்கி'' என்பதற்குப் பிறப் பினை நீக்கி எனப் பொருள்கொண்ட பரிமேலழகரின் கருத்துப்படி, (நீக்கி எனற்பாலது தொடை நோக்கி மெலிந்தது) மருணீக்கியார் எனும் பெயர் அமைந்துள்ளது (பக் - 40) என்று கூறியிருப்பது முதலாகிய பல நுண்பொருட்செய்திகள் காட்டப்பெற்றிருக்கின்றன. 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்' என்ற தொடரினால் விளைந்த வரலாற்றுப் பொய்மையை மிக்க வன்மை தோன்றக் கண்டித்திருக்கும் பகுதி (பக் - 165). அப்பருக்கமைந்த மன உறுதிசிவக்கவிமணிஅவர்களுக்குண்டு எனத்தெளிவாக்குகின்றது.

திருப்புகலூரில் திருநாவுக்கரசு சுவாமிகள் முத்தித் திருநாளைக் கொண்டாடவேண்டிய முறையை (பக் - 166) இவர்கள் கூறி யுள்ளவாறே இப்போது அங்கு வழிபாடு நடத்தப்பெறுகிறது என்று பிறசேர்க்கையில் தேவஸ்தானத்தார் தெரிவித்திருப்பது நம் மகிழ் விற்குரியதாகும். சாத்திர, இலக்கிய நுண்பொருள்கள் ஆங்காங்குக் கூறப்பெற்றுள்ளன. இத் தலையாய தொண்டினைத் தமிழுலகத்திற்கு உதவியுள்ள சிவக்கவிமணி, திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்குத் தமிழ் உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அன்பர்கள் தேவஸ்தானத்துக்கு எழுதிப்பெறலாம். திரு. சிவக்கவி மணி அவர்களின் உயர்பணிகள் ஓங்குக என்று அம்பலத்தாடுவான் மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். — சோ. சிங்காரவேலனார்,

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Central Rules, 1956).

Form IV

1. Place of publication - DHARMAPURAM
2. Periodicity of its publication - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri. K. SUNDARESA IYER
   Nationality - INDIAN
   Address - VELLALAR DOUBLE ST., MAYURAM
4. Editor's Name - Sri. SOMASUNDARA THAMBIRAN SWAMIGAL
   Nationality - INDIAN
   Address - 41, USMAN ROAD, T. NAGAR, MADRAS - 17
5. Names & addresses of individuals who own the Newspaper and partners or Share holdersholding more than one percent of the total Capital - His Holiness Sri-la-Sri SUBRAMANIA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl. Dharmapuram Adhinam, Dharmapuram, Mayuram P. O. Tanjore Dt

I K. Sundaresa Iyer hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(Sd.) K. SUNDARESA IYER, Publisher.

Dated 8-2-1960

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 10-3-60.